

# சோபையிழந்த மே தினம்

யோ.தர்மராஜ்

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமையால் இம்முறை தொழிலாளர் தினம் சோபையிழந்து காணப்பட்டதுடன், அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பால் அரசியல் கட்சிகளால் நாட்டில் பல பகுதிகளில் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 511 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை (02.05.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 30 , 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.50




நாட்டில் எப்பாகத்திலும் தலைப்பிறை தென்படாத காரணத்தினால், புனித நோன்புப் பெருநாளை நாளை 3ஆம் திகதி கொண்டாட கொழும்பு பெரிய பள்ளிவாசல் நேற்றிரவு தீர்மானித்தது.

## சகோதரர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது

முழு ராஜபக்ஷமாரும் வீடு செல்லக் கோருகிறார் ரணில்



02 பக்கம்

# கோட்டா - மஹிந்த முரண்பாடு உச்சம்!

## பிரதமர் இராஜினாமா செய்யாவிடின் இவ்வாரத்திற்குள் ஜனாதிபதி அதிரடி முடிவு



நமது அரசியல் செய்தியாளர்

இடைக்கால அரசொன்றை அமைப்பது தொடர்பில் மகா சங்க சபையின் அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் கருத்து முரண்பாடுகள் மேலும் உச்சமடைந்துள்ளதாக அறியமுடிகின்றது.

கடந்த சில தினங்களாக ஆளுங்கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகல் குறித்தான மகாநாயக்க தேரர்களின் கருத்து தொடர்பில் கூறியுள்ளார். எவ்வாறாயினும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்யாதிருப்பதால் இருதரப்புக்குமிடையில் ஏலவே இருந்த கருத்து முரண்பாடு தீவிரமடைந்துள்ளது.

» 02 பக்கம்

## கலாசார உறவுகளே சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்



நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

02 பக்கம்

## உலக நாடுகள் அனைத்தும் இலங்கையை நிராகரிப்பு

அரசை பதவி விலகக் கோருகிறார் மைத்ரி



02 பக்கம்

## தேசிய நலனுக்காக பெருநாளில் இறைவனிடம் பிரார்த்திப்போம்



முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

02 பக்கம்

## உஷ்



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த மீது முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் உட்பட பலர் கடும் கடுப்பில் இருக்கின்றனராம்.

ஜனாதிபதிக்கு அருகிலிருந்து கிட்டத்தட்ட ஜனாதிபதியின் செயலாளர்போல எல்லா வேலைகளையும் செய்யும் மஹிந்தானந்தவால் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர்கள் பலர் பிரதமரிடம் முறைப்பாடு செய்துள்ளனராம்.

## அனைத்து இன மக்களின் அவலங்கள் நீங்க இந்நன்னாளில் பிரார்த்திப்போம்



மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் வாழ்த்து

02 பக்கம்

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பறிப்பதாக எனக்கு அச்சுறுத்தல்

## அஞ்சப்போவதில்லையென்கிறார் சஜித்



யோ.தர்மராஜ்

இடைக்கால அரசாங்கத்துடன் இணையாவிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பறிப்பதாகக் கூறுகின்றனர். கொள்கைகளுக்காக எந்தவொரு பதவியையும் துறக்க நான் தயார். அதில் எந்த ஆட்சேபனையுமில்லை. என் பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

02 பக்கம்

## மே தினக் கூட்டங்களின் படங்கள், செய்திகள் உள்ளே...

## மன்னம்பிட்டி வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு!

11 பக்கம்

# நாடு உத்தியோகபூர்வமாக வங்குரோத்து அடைந்துள்ளது!

## வங்கிகள் மிகவும் ஆபத்தான நிலையில் என்கிறார் சம்பிக்க



நாடு கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதியில் இருந்து உத்தியோக பூர்வமாக வங்குரோத்து அடைந்துவிட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



'முத்துக்கு முத்தாக இருந்தார்களோ இல்லையோ சொத்துக்கு சொத்தாக இருந்தார்கள் அண்ணன் தம்பிமார்..'

# நாட்டில் மீண்டும் எரிபொருள் பற்றாக்குறை!

02 பக்கம்

# விமான சேவைகள் வரையறை

02 பக்கம்

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-

மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-

வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்

நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-

மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்

செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

+9477 157 6356

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

## சோபையிழந்த...

எனினும், ஆளுந்தரப்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, கட்சி ரீதியாக மே தினக் கூட்டம் நடத்தப்படவில்லை என்பது விசேட அம்சமாகும்.

நாடு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால் இம்முறை கொண்டாப்பட்ட மே தினமானது, சோபையிழந்து காணப்பட்டதுடன், மக்கள் தங்களுடைய கோபத்தையும் அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் முகமாகவே இம்முறை மே தினத்தை கொண்டாடினர்.

குறிப்பாக, வருடாந்தம் அரசியல் கட்சிகளினால் மே தினக் கூட்டங்கள் விமர்சையாகக் கொண்டாடப்படுவதுடன், ஆட்சியிலிருக்கும் கட்சியானது தங்களுடைய அரசியல் பலத்தை காட்டுவதற்கான மே தினக் கூட்டத்தை ஆடம்பரமாக ஏற்பாடு செய்யும். ஆனால் இம்முறை அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறுகோரி மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளதால் ஆட்சியிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ரீதியாக மே தினக் கூட்டத்தை நடத்தவில்லை.

மாறாக, தொழிற்சங்கங்கள் இணைந்து நுகேகொடையில் மே தினக் கூட்டத்தை நடத்தியிருந்தன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தியும் மாவட்ட ரீதியாக மே தினக் கூட்டங்களை நடத்தியிருந்தன. அதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேனவின் தலைமையிலான மே தினக் கூட்டம் நேற்று (01) பொலன்னறுவையில் இடம்பெற்றது.

அதேபோன்று, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் அக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினப் பேரணி கெம்பல் மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு, கொழும்பு நகர சபை வரை வருகை தந்தது.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டாலும் கொழும்பு மாளிகாவத்தை பி.டி. சிறிசேன மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்ட மே தினப் பேரணி, கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக சென்று மே தினக் கூட்டம் நடத்தப்பட்டது.

எனினும், இதற்கு முன்னர் உழைக்கும் மக்களின் உரிமைக்காக போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டாலும் இம்முறை மக்களின் வாழ்வாதாரம் மற்றும் ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கத்திலேயே மே தினக் கூட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

பல மாவட்டங்களிலிருந்து பஸ்களில் மக்கள் அழைத்துவரப்பட்டு மே தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டாலும் இம்முறை மாவட்ட ரீதியாக மே தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், பிரதான கட்சிகளின் மே தினக் கூட்டகளும் இதனால் சோபையிழந்து காணப்பட்டன. சில கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் வரையறுக்கப்பட்ட மக்களுடன் மண்டபங்களினுள் முன்னெடுக்கப்பட்டதால் மக்களுக்கான உரிமை போராட்டம் சோபையிழந்து காணப்பட்டன.

எனினும், மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்ட பகுதிகளிலிருந்த மதுபானசாலைகள் நேற்று (01) நண்பகல் 12 மணிக்கு பின்னர் மூடப்பட்டிருந்ததுடன், விசேட பாதுகாப்புகளும் வழங்கப்பட்டிருந்தன.

## கோட்டா - மஹிந்த...

நேற்றுக்காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவி தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளுக்கு தாம் கட்டுப்படுவாரென்று தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதற்கிடையில் ஜனாதிபதி தரப்பு, பிரதமர் தரப்பென இரண்டு தரப்புகள் ஆளுங்கட்சிக்குள் உருவாகியுள்ளன. தரப்புகளின் செயற்பாடுகளால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பிரதமர் பதவி மற்றும் இடைக்கால அரசு தொடர்பில் ஜனாதிபதி இவ்வாரம் தீர்க்கமான முடிவை எடுப்பாரென நம்பகரமாக அறியமுடிகின்றது.

## சகோதரர்களுக்கிடையில்...

***யோ.தர்மராஜ்***

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவருமே வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதே எதிர்க்கட்சி மற்றும் மக்களின் நிலைப்பாடாகவுள்ள நிலையில் அரசாங்கத்திற்குள்ளும் சகோதரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, 20ஆவது திருத்தத்திற்கு பதிலாக 21ஆவது திருத்தத்தை முன்வைக்குமாறு ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார். 21 ஆவது திருத்தத்தை முன்வைப்பதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்குமா, எனவே, நான் 21ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று (01) இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாங்கள் இதுவரை எதிர்நோக்காத பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை இன்று எதிர்நோக்கியுள்ளோம். பொருளாதாரம் முற்றாக சீர்குலைந்துள்ளது. வியாபாரங்கள் வங்குரோத்தடைந்துள்ளன. விவசாயிகளுக்கு உரமில்லை. மீனவர்களுக்கு டீசல் இல்லை. பல சேவைத்துறைகள் முடங்கியுள்ளன. இன்னும் இலட்சக்கணக்கான சேவைத்துறைகள் முடங்கலாம். சிறிய மற்றும் மத்திய வர்க்கத்தின் வர்த்தகங்கள் வீழ்ச்சியடையலாம்.

இளைஞர் யுவதிகளுக்கு மாத்திரமல்லாது, அனைவருக்குமே எதிர்காலம் இல்லாது போயுள்ளன. இன்று இலங்கை அராஜகமாகியுள்ளது. அனைத்து இடங்களிலும் போராட்டங்கள். இதில் "கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குச் செல்ல வேண்டும்", "முழு ராஜபக்ஷக்களும் வீட்டுக்குச் செல்ல வேண்டும்" என்ற இரு தொனிப்பொருளே முக்கியமாகவுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவருமே வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதே எதிர்க்கட்சி மற்றும் மக்களின் நிலைப்பாடாகவுள்ளது. ஆனால், அரசாங்கத்தில் இரு நிலைப்பாடுகள் உள்ளன. ஆளுந்தரப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளன. அதேபோன்று, சகோதரர்களுக்கு இடையில் முரண்பாடு காணப்படுகின்றன. அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பு இருவரும் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். மற்றொரு தரப்பு பிரதமர் செல்ல வேண்டும். ஜனாதிபதி இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இந்த நிலையில், 20ஆவது திருத்தத்திற்கு பதிலாக 21ஆவது திருத்தத்தை முன்வைக்குமாறு ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார். ஆனால், வரைபு இல்லை. எனவே, நான் 21ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்பாகும். 21ஆவது திருத்தத்தை முன்வைப்பதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்குமா? அவ்வாறாயின், நாங்கள் பொருளாதார நெருக்கடிக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

20ஆவது திருத்தத்திலுள்ள நிறைவேற்று அதிகாரத்தை குறைத்து 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாயின், அதனை நாங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்வோம். புதிய அரசியலமைப்பே எமக்கு தேவையாகும்.

அனைத்து கட்சிகளும் இணைந்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும். 113 பெரும்பான்மையுள்ள அரசாங்கத்தினாலேயே தீர்வு வழங்க முடியாதளவிற்கு நெருக்கடி பாரதூரமானது. கீழ்த்தரமான அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டால் நெருக்கடி மேலும் உக்கிரமடையும் - என்றார்.

## நாட்டில் மீண்டும்...

பணிப்புறக்கணிப்பு காரணமாக நாட்டில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி (பௌசர்) உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தாம் கோரும் 60 வீத கட்டண திருத்தம் தமக்கு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் நேற்றுமுன்தினம் முதல் தனியார் எரிபொருள் தாங்கி ஊர்தி (பௌசர்) உரிமையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், எரிபொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் தாக்கம் இன்று முதல் உணரப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள எரிபொருள் விலையுடன் ஒப்பிட்டு போக்குவரத்துச் செலவுகளை மீளாய்வு செய்யத் தவறியமைக்கு எதிராக நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி (பௌசர்) உரிமையாளர்கள் சங்கம் பணிகளில் இருந்து விலகிக் கொண்டது.

எனினும் நிலைமையை சமாளிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## நாடு உத்தியோகபூர்வமாக...

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலைமையில், வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும் கொடுக்கல், வாங்கல்கள், வெளிநாட்டு வர்த்தகம் என்பன நின்று போயுள்ளன.

வங்கி கட்டமைப்பு மிகவும் ஆபத்தான நிலைமையை நோக்கி சென்றுக்கொண்டிருக்கின்றது. நிதி கட்டமைப்பு வெடித்து சிதறி வருகிறது.

இதன் காரணமாக சில நாட்களுக்கு அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் நிறுத்தும் அறிவிப்பை அரசாங்கம் வெளியிட நேரிட்டது. இவற்றின் மூலம் நாட்டின் அபிவிருத்தி முற்றாக ஸ்தாபித்து போயுள்ளதை காண முடிகிறது.

குறிப்பாக, தனியார் துறையின் 26இலட்சம் வேலைவாய்ப்புகள் பாரதூரமான ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன. சுற்றுலாத்துறைக்கு மேலதிகமாக தொழிற்சாலைகளும் தற்போது மூடப்பட்டு வருகின்றன.

நாட்டிற்குள் இயங்கி வந்த முக்கியமான தொழிற்சாலைகள், ஆடை உற்பத்தித்துறை என்பன வேறு நாடுகளை நோக்கி கொண்டு செல்லப்படுகின்றன. அதேபோல் அரச சேவையும் படிப்படியாக பாரதூரமான நெருக்கடியை நோக்கி செல்லவுள்ளது எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

## உலக நாடுகள் அனைத்தும்...

***யோ.தர்மராஜ்***

முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை அரசாங்கத்திலுள்ள அனைத்து தலைவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சர்வதேச நாடுகளும் இலங்கையை நிராகரிப்பதனால் அரசாங்கமும் தலைவர்களும் பதவி விலகி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு வழி விட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்தோடு, தற்போதைய அரசாங்கம் மோசடியானது என்பதால் நாட்டின் நிலைமையை கருதி எவ்வித உதவிகளையும் வழங்க முடியாதுள்ளதாக தன்னை சந்தித்த தூதுவர்கள் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பொலன்னறுவையில் நேற்று (01) இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாங்கள் இன்று மே தினத்தை கொண்டாடுகின்றோம். குறிப்பாக, முழு உலகத்திலுமுள்ள உழைக்கு மக்கள் பாதைக்கு இறங்கும் விசேட தொழிலாளர் தினமாகும். இதனாலேயே, விவசாய மக்களுடன் மே தினத்தை நாங்கள் கொண்டாடுகின்றோம். அதேபோன்று, சீர்குலைந்துள்ள நாட்டையும் தங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இன்று மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

வீதிக்கு இறங்கி போராடுவோரின் குரலானது, மக்களின் குரலாகும். அதற்கு நாங்களும் ஆதரவளித்து, இந்த அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறும் கோரியே, பொலன்னறுவையிலுள்ள விவசாய மக்களை ஒன்றிணைத்து, பேரணிச் சென்று, போராட்டம் நடத்தினோம். அவ்வாறாயின் மக்களின் கோரிக்கையை அரசாங்கத்திலுள்ள அனைத்து தலைவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தற்போதைய எந்தவொரு பிரச்சினையும் இருக்கவில்லை. ராஜபக்ஷக்கள் நல்லதொரு நாட்டையே பொறுப்பேற்றனர். ஆனால், இன்று வீட்டில் உணவில்லை, எரிவாயு, எரிபொருள் இல்லை, தாங்கிக்கொள்ள முடியாதளவிற்கு பொருட்களின் விலை அதிகரிப்பு, பொருட்கள் தட்டுப்பாடு, உரமின்மை, உணவுத் தட்டுப்பாடு போன்ற நெருக்கடிகளால் நாடு இன்று மிக மோசமான நிலைமைக்கு வீழ்ந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் நாங்கள் மக்கள் பக்கமே நிற்க வேண்டும். அதனாலேயே நாமும் இன்று வீதிக்கு இறங்கினோம். மக்களுக்கு ஆயிரம் பிரச்சினை இருக்கும்போது நாங்கள் வீடுகளில் முடங்கியிருக்க முடியாது. இந்த அரசாங்கம் செல்லும் பாதை தவறானது என்பதாலேயே அரசாங்கத்திலிருந்து 51 பேர் சுயாதீனமாக செயற்பட ஆரம்பித்தோம்.

எனவே, புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்ட அரசாங்கமாக இருக்க வேண்டும். இன்று நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் அடிமட்டம் தொடக்கம் உயர் மட்டம் வரையான அனைத்து மக்களும் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் இளைஞர்களின் போராட்டத்திற்கு முழு நாட்டு மக்களின் ஆசீர்வாதமும் கிடைத்துள்ளது. அந்த ஆசீர்வாதம் மற்றும் ஒத்துழைப்புக்கு நாங்களும் ஆதரவளிக்க வேண்டும். இளைஞர்களுக்காக சிறந்த நாட்டை உருவாக்குவதற்கு ஆதரவளிக்க வேண்டும்.

ஒரு பக்கம் நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்புகள் வலுக்கின்றபோது, மறுபக்கத்தில் சர்வதேசங்கள் இந்த அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. என்னுடைய ஆட்சியில் முழு உலக நாடுகளும் உதவின. ஆனால், இன்று இந்த அரசாங்கம் மோசடியானது என்பதால் எங்களால் நாட்டின் நிலைமையை கருதி எவ்வித உதவிகளையும் வழங்க முடியாதுள்ளதாக என்னை சந்தித்த தூதுவர்கள் தெரிவித்தனர். இவ்வாறான சூழ்நிலைகளில் அரசாங்கம் தொடர்ந்தும் பிடிவாதம் பிடித்துக்கொண்டிருக்குமா அல்லது பதவி விலகி சிறந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு வழிவிடுமா என்பதே மக்களின் கேள்வியாகவுள்ளது. எனவே, முழு அரசாங்கமும் தலைவர்களும் பதவி விலகி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு வழி விட வேண்டும் - என்றார்.

## விமான சேவைகள்...

பெரும்பாலான விமான நிறுவனங்கள் கொழும்பில் இருந்து தங்கள் விமான சேவைகளை மட்டுப்படுத்த தீர்மானம் எடுத்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியின் விளைவாக, இலங்கைக்கு சேவையாற்றும் விமான சேவை நிறுவனங்களுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக கடந்த 3 – 6 மாதங்களில் சரக்கு மற்றும் பயணிகள் பயணங்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளதாக விமான சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இலங்கை வங்கிகள் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பணம் அனுப்ப முடியாமல் போனதன் விளைவுகள் இவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அனைத்து இன மக்களின்...

நாட்டைப் பீடித்துள்ள முழு அவலங்களும் நீங்கி, சகல இனங்களும் சந்தோஷமாக வாழ புனிதமிக்க இந்த நோன்புப் பெருநாள் தினத்தில் பிரார்த்திப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புனித நோன்புப் பெருநாள் தினத்தை முன்னிட்டு, அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

"ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, நல்லமல்கள் புரிந்த அனைவரையும் "அல்லாஹ்" பொருந்திக்கொள்வானாக! பொருளாதாரத்தின் உச்ச நெருக்கடியிலும் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் நாம் நோன்பு நோற்றோம்.

இந்த ஈகைத் திருநாளில் இல்லாதோருக்கு கொடுத்துதவும் கடமையும் எம்மீது ஏவப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்தின் கொடிய பிடியில் முஸ்லிம்களும், ஏனைய சமூகத்தினரும் கஷ்டப்படும் இன்றைய சூழலில், அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் மனநிலைகளில் நாம் செயற்படுவோம். இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலும், நமது நம்பிக்கைகளை நாம் இழக்கவில்லை.

நாட்டில் இன்று பசி, பட்டினி, கஷ்டத்தினால் மக்கள் வீதிக்கு இறங்கி, ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் ஓர் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, இந்த நிலை மாறி, நாட்டுக்கு நல்லதொரு ஆட்சியும், சிறந்த ஆட்சியாளர்களும் அமைய வேண்டுமென்று, நாம் இந்த பெருநாள் தினத்தில் பிரார்த்திக்க வேண்டும். அனைவருக்கும் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்" என்று தெரிவித்துள்ளார்.

## கலாசார உறவுகளே...

இணக்கமான ஒன்றுகூடல்கள், கூட்டு சமரசம், தியாகம், தீமையிலிருந்து மீள்வது, நன்மையைக் கடைப்பிடிப்பது போன்ற அவரவர்களுக்கிடையில் நிலவுகின்ற கலாசார உறவுகளே சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இந்த நல்ல எண்ணங்கள் அனைவருக்கும் மத்தியில் பரவ வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது,

ஒரு மாதகால நோன்பை முடித்துக் கொண்டு இஸ்லாமிய மக்கள், அவர்களின் நம்பிக்கையின்படி ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள் தினத்தில் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்து ஆன்மீக திருப்தியும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நானும் பிரார்த்திக்கின்றேன்.

இஸ்லாமிய மக்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு சமய வழிபாடுகளில் நோன்புப் பெருநாள் சிறப்பானதொரு கொண்டாட்டமாகும். ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் மார்க்கப் போதனைகளின்படி நற்செயல்களைப்புரிய இது ஒரு மனத் தூண்டுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இணக்கமான ஒன்றுகூடல்கள், கூட்டு சமரசம், தியாகம், தீமையிலிருந்து மீள்வது, நன்மையைக் கடைப்பிடிப்பது போன்ற அவரவர்களுக்கிடையில் நிலவுகின்ற கலாசார உறவுகளே சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

இந்த நல்ல எண்ணங்கள் அனைவருக்கும் மத்தியில் பரவ வேண்டும். அனைத்து இறையியலாளர்களின் தத்துவமும் விடுதலையின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. பெருநாள் கொண்டாட்டம் உட்பட இஸ்லாமிய தத்துவத்தில் அந்த மார்க்கத்தின் நம்பிக்கைகளை நாம் நீண்ட காலமாகக் கண்டு வருகிறோம். அது சொல்லும் செய்தியை, சமூக நல்வாழ்வுக்கு பிரயோகிப்பதன் மூலம் பரஸ்பர புரிதலின் வளர்ச்சிக்கு காரணமாக அமைகின்றது. இது மதங்களுக்கு இடையிலான சமூக, கலாசார புரிதலை உறுதிப்படுத்துகிறது.

மதங்கள் போதிக்கும் சமூகக் கோட்பாடுகளை சமூக நலனுக்கான செய்திகளாகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

இந்த நோன்புப் பெருநாள் பண்டிகைக்குப் பின்னர் வரும் காலம் இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் மகிழ்ச்சியான மற்றும் வளமான காலமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேசிய நலனுக்காக...

அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலைமையினாலும், பொருளாதார சீர்குலைவினாலும், நாட்டு மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தேசிய நலனுக்காகப் பெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போமாக என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள ஈதுல் பித்ர் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் ஈகைத் திருநாள் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் தற்போதைய அரசியல் தலைமைத்துவம் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளின் விளைவாக, இலங்கையின் அரசியல் கட்டமைப்பு முற்றாகச் செயலிழந்து, நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள மிகவும் நெருக்கடியான நிலைமையிலும் கூட, ஆட்சிபீடத்திலிருந்து அகன்று சுமுகநிலை தோன்ற வழிவிடுமாறு சகல இன மக்களும் ஒருமித்து எழுப்பிவரும் கோஷம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அது ஜனநாயகத்தை அறவே மதிக்காத அப்பட்டமான சுயநலத்தையே வெளிப்படுத்துகின்றது.

நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகள் அனைத்துக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளிநாட்டுச் செலாவணியின்மையாலும், நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியாலும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சிரமங்களுக்கு மத்தியில் அப்பாவி பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்துநிற்க நேர்ந்திருக்கிறது.

பொதுவாக எல்லா சமூகத்தினரையும் போல, முஸ்லிம்களும் புனித நோன்பு காலத்திலும் கூட மிகவும் இக்கட்டான நிலைமைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

பிரச்சினைகளுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் பொறுமையுடன் நோன்பை நோற்று, இறை வணக்கங்களில் அதிகமாக ஈடுபட்டதோடு, ஈகைப் பண்பையும் இயன்றவரை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

எனவே இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டு, சுமுக நிலை தோன்றுவதற்கு பெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போம். அத்துடன், பல்வேறு நாடுகளிலும் இன்னல்படும் உலக முஸ்லிம்களுக்காகவும் அல்லாஹ்விடம் கையேந்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

## எதிர்க்கட்சித் தலைவர்...

ஆனால், என்னை யாரும் அச்சுறுத்த வர வேண்டாம். அதற்கு அஞ்சவும் மாட்டேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 29ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (01) புதுக்கடையில் உள்ள ரணசிங்க பிரேமதாச சிலைக்கு முன்பாக இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மறைந்த ரணசிங்க பிரேமதாச இருந்திருந்தால் இன்றைய நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்காது என அனைத்து மக்களும் கூறுகின்றனர். அவ்வாறாயின், 29 வருடங்களுக்கு பின்னர் உண்மையை உணர்ந்துகொண்டுள்ளனர். குறிப்பாக, உண்மை எப்போதாவது வெல்லும். உண்மையை புரிந்துகொள்ளவும் உண்மையை வெல்லும் எங்களுடைய மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

மக்கள் வரிசையில் இருக்க வேண்டியுள்ளது. தாய் மற்றும் குழந்தைகளின் மந்தபோசனம் அதிகரிப்பு, வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கை செலவு ஏற்றுக்கொள்ள தாங்கிக்கொள்ள முடியாத அளவு அதிகரித்துள்ளது, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகளின் விலைகள் அதிகரித்துள்ளன. இன்றைய சமூகம் நிர்வாகமும் நீதியும் இல்லாத சமூகமாக மாறியுள்ளது.

திருட்டு, இலஞ்சம் மற்றும் ஊழல் என்பனவும் இந்த பொருளாதார நெருக்கடியில் திரைமறைவில் இடம்பெறுகின்றன. தேசிய சொத்துகளை திருடுவதற்கும் இடைக்கால அரசாங்கத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். இடைக்கால அரசாங்கம் என்பது இலஞ்சம் ஊழல்களுக்கான களமாகும்.

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை திரிவுபடுத்த முடியாது. அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எந்தவொரு பதவி மற்றும் பட்டங்களை கொடுத்தாலும் அதற்கு நாங்கள் ஏமாற மாட்டோம். மக்கள் போராட்டத்தை, இடைக்கால அரசாங்கத்தின் மோசடிகளுக்காக காட்டிக்கொடுக்க முடியாது. மோசடி, இலஞ்சம், ஊழல் நிர்வாகத்திலிருந்து விடுவிப்பதற்காகக் கொண்டுவரப்படும் மோசடியான தந்திரோபாயமே இடைக்கால அரசாங்கமாகும்.

கொள்கைகளுக்காக எந்தவொரு பதவியையும் துறக்க நாங்கள் தயார். இடைக்கால அரசாங்கத்துடன் இணையாவிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பறிப்பதாகக் கூறுகின்றனர். அதில் எந்த ஆட்சேபனையுமில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை துறக்க நாங்கள் தயார்.

இடைக்கால அரசாங்கத்துடன் இணைவதற்கு நாங்கள் தயாரில்லை. மக்களாணை மற்றும் ஆசீர்வாதம் கிடைத்தால் மாத்திரமே ஆட்சி அமைப்போம். அவர்கள் நிராகரித்தால் அதனையும் ஏற்றுக்கொள்ள தயார். முழு நாட்டு மக்களும் துன்பப்படும் போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என எதுவும் பிரயோசனமில்லை.

அரசியல் சூதுகளுக்காக சஜித் பிரேமதாசவை அச்சுறுத்த வர வேண்டாம். அச்சுறுத்தலுக்கு நான் அஞ்சவும் மாட்டேன். மக்கள் நிலைப்பாட்டை திசைத்திருப்பி, அச்சுறுத்தி மக்களை ஏமாற்றியது போதும். இனியும் அதற்கு ஏமாற முடியாது.

இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக நாட்டை மேலும் சீர்குலைக்கும். இவ்வாறான மோசடியான அரசாங்கத்துடன் இணைவதை விட பதவிகளை இராஜினாமா செய்வதே தனக்கு மகிழ்ச்சியானது.

அரசியலிலிருந்து விலகுவதற்கு நான் எவ்வேளையிலும் தயார். இந்த நாட்டு மக்களின் புனிதமான போராட்டத்தை மோசடியான முறையில் காட்டிக்கொடுக்க மாட்டோம் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் சிலைக்கு முன்னால் இருந்து இந்த உறுதியை வழங்குகின்றேன் - என்றார்.

# மே தின நிகழ்வுகள்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – கொழும்பு





மக்கள் விடுதலை முன்னணி – கொழும்பு



ஐக்கிய மக்கள் சக்தி - கொழும்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - கொழும்பு



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு – கிளிநொச்சி



ஐக்கிய தேசிய கட்சி – புதிய நகர மண்டபம்



தொழிற்சங்க கூட்டமைப்பு – கொழும்பு



படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன, கிரிஷான் காரியவசம், பிரதீப் தம்பரகே





முன்னிலை சோஷலிசக் கட்சி – கொழும்பு




இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கம் - கண்டி





மக்கள் ஆசிரியர் சங்கம் - காவத்தை

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, மே 02ஆம் திகதி, திங்கட்கிழமை**

# காலத்தின் கோலம்!

தான் பிரதமர் பதவியிலிருந்து விலகத் தயார் என பிக்குகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுடன் நடந்த கலந்துரையாடலின்போதே இவ்வாறு குறிப்பிட்ட தேரர், தற்போதைய அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்காக 4 மகாநாயக்க தேரர்கள் ஒன்றாக இணைந்துள்ளதாகவும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் அமைச்சரவைப் பதவியிலிருந்து விலகி இடைக்கால அரசாங்கத்தை அமைக்காவிட்டால் அனைத்து அரசியல்வாதிகள் மீதும் மகாசங்கம் கடும் நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவுக்கு ஆதரவாக நின்ற பௌத்தம், இப்போது அவருக்கு எதிராக பகிரங்கமாகவே வந்துநிற்கிறது. பௌத்த மேலாண்மைவாத அடிக்கல்லுடன் மஹிந்த கட்டிக்காத்த சிங்கள அரசு என்னும் கோட்டை மெதுவாக சரிந்துகொண்டிருக்கிறது.

புதிய மிலேனியத்தின் முதல் தசாப்தத்தின் நடுப்பகுதியில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, கட்சியிலும் அரசிலும் தமக்கு அடுத்த நிலையை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்குப் பின்னடித்தார். ராஜபக்ஷவின் செயற்போக்கு, அணுகுமுறை, விடயங்களைகட கையாளும் பண்பியல் போன்றவை நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடியனவாக அமைந்துவிடும் என்று கருதிய சந்திரிகா, அவரை முன்நிறுத்துவதை செயல்படுத்துவதற்குப் பின்னின்றார். அப்போது தமக்கு ஆதரவாக இதே பௌத்த மத பீடங்களை உசுப்பேற்றி களத்துக்கு இழுத்து வந்து இறங்கினார் மஹிந்த.

மஹிந்தவுக்கு உரிய இடம் வழங்கப்படாவிட்டால் சிங்கள மக்களை, பௌத்த பிக்குகளை வீதிக்கு இறக்கி நாட்டை முடக்குவோம் என்று பிக்குமார் கொக்கரித்திருந்தனர்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் பாதுகாவலனாக மஹிந்தவை உருவகப்படுத்தி, அவரை தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடியது பேரினவாதம். அதனால் பௌத்த மத பீடங்களின் கடும் அழுத்தத்தினால் வேறுவழியின்றி அடிபணிந்தார் சந்திரிகா. தமது உளமார்ந்த விருப்பமின்றியே மஹிந்தவை பிரதமராக்கினார். கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அவரை அறிவிக்கவேண்டிய கட்டாயத்துக்கும் உள்ளானார்.

1959 செப்டெம்பரில் அவரின் தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஒரு பௌத்த பிக்குவினால் சுட்டுக் கொல்லப்பட்ட காலத்தின் பின்னர், அடுத்த நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு இலங்கை அரசியலில் பௌத்த மத பீடம் சற்றுத் தள்ளிவைக்கப்பட்டிருந்தது. நேரடிப் பங்களிப்புக்கு இடமளிக்கப்படவில்லை.

ஆனால், அரசியலில் தன்னை ஸ்திரப்படுத்தி, தனக்கான பதவிகள் மற்றும் நிலைகளை எட்டுவதற்காக தனக்கு ஆதரவாகப் பேரினவாதம் என்ற மூலோபாயத்தைக் கையிலெடுத்து, பௌத்த மத பீடத்தை இலங்கை அரசியலுக்குள் நேரடியாகத் தலையிட்டு செல்வாக்கு செலுத்தும் சக்தியாக இழுத்துவந்தார் மஹிந்தர்.

அந்த பௌத்த மதபீடமே இன்று அவரை அரசியலிலிருந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளும் அரும்பணியை வெளிப்படையாக - பகிரங்கமாக வெட்டவெளிச்சமாக முன்னெடுக்கின்றது.

விதைத்த வினையை அவர் இப்போது அறுக்கவேண்டியவராக இருக்கின்றார். தாம் அரசியலில் மேலெழுவதற்கு எந்தப் பேரினவாத ஆயுதத்தை கையில் எடுத்தாரோ அதனாலேயே வீழ்த்தப்படும் அவலம் அவருக்கு நேர்ந்திருக்கிறது. பைபிள் வாசகப்படி அவர் எதனால் அளந்தாரோ, அதனால் அவர் அளக்கப்படுகின்றார்.

விதியின் விளையாட்டு வலியது. பல சமயங்களில் விபரீதமானதும் கூட.

மஹிந்தவுக்கு (பாது)காப்பு என்று கருதி இவ்வளவு காலமும் பிரித் ஓதி, பிக்குகள் அவர் கையில் அவ்வப்போது கட்டிய கயிறுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இன்று அவரின் அரசியல் வாழ்வின் கழுத்துக்குச் சுருக்குக் கயிறாக வந்திருப்பது விதியின் விளையாட்டன்றி வேறேது?

மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் மேலேறுவதற்கு தாங்கள் வழங்கிய ஆசீர்வாதங்களை எல்லாம் அவரை வீழ்த்துவதற்கான சாபங்களாக்கவேண்டிய துஷ்ட நிலைமை - துரதிர்ஷ்ட நிலைமை பௌத்த பிக்குகளுக்கு.

பௌத்தம் கூறும் கர்ம விதி என்பது இதுதானோ?

மறுபுறம், பௌத்த மகா சங்க சபை பதவி விலகக் கோரினாலும் விலகாமல் முரண்டுபிடிக்கும் மஹிந்தவின் இந்த உடும்புப்பிடித்தனம் போருக்குப் பின்னரான தமிழர் தீர்வு விடயத்திலும் இருந்திருக்குமானால், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குத் தீர்வை வழங்கியே தீருவேன் என்று மஹிந்த விடாப்பிடியாக நின்றிருந்தால் இன்று உலகம் அவருடன் நின்றிருக்கும். பாதிக்கப்பட்ட இனமொன்றுக்குத் தீர்வை பெற்றுக்கொடுத்த மனநிம்மதியிலாவது அவர் பதவியிலிருந்து சென்றிருப்பார்.

ஆனால், பௌத்த கடும்போக்கை விதைத்த - இன்று புலிவாலை பிடித்த கதையாக தடுமாறும் நிலை. கொழும்பு அரசியலின் நிலைமையை பார்த்தால் மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பாமல் ஓயமாட்டார்கள் பிக்குமார் என்ற சூழ்நிலை எழுந்துள்ளது. தம்பியை அரசியலுக்கு கொண்டுவந்த அண்ணன் இன்று தம்பிக்காக தனது பதவியை துறப்பதெல்லாம் காலம் செய்த கோலம்.அவ்வளவே.

# இலத்திரனியல் அரசாங்கம்



தற்காலத்தில் அதிகமான அரசுகள், பொதுநல அரசுகளாகவே உள்ளன. இவை நாடாளுமன்ற சித்தாந்த அமைப்புக்குட்பட்ட நாடுகளில் நடைமுறையில் உள்ளன. அரசானது, பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சக்திகளின் உந்துதலினால் வளர்ச்சி பெற்றுவந்த ஒன்றாகும். அதாவது 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஜூன் ஜாக் ரூசோ, அடம்ஸ்மித் போன்ற பழமைவாதிகள் அரசை ஒரு சிறைப்படுத்தப்பட்ட நிலையில் கண்டனர். அரசானது சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு போன்ற விடயங்களை நிறைவேற்றுவதோடு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் பொருளாதார விடயங்களில் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்றும் கூறினர். இதனால் அரசு தலையிடா அரசு என பழமைவாதிகளால் அடையாளப்படுத்தப்பட்டு, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைத்தொழில் புரட்சியானது அரசின் சீர்திருத்த சேவையினை வேண்டி நின்றது. இதனால் ஜெரமி பெந்தம், எஸ்மில் போன்ற பழமைவாதிகள் அரசானது காலத்திற்கு தேவைப்படும் வகையில் சகல துறைகளிலும் தலையிட வேண்டும் என்றனர். இந்நிலையில், இக்கால அரசு சீர்திருத்த அரசு என அழைக்கப்பட்டது. பின்னர் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசு தொடர்பான பொதுநல கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட அரசு, பொதுநல அரசாக தோற்றம் கண்டது. ஒரு மனிதன் பிறந்தது முதல் அவனது பிறப்புச் சான்றிதழ் கொடுப்பதிலிருந்து அவன் இறப்புச் சான்றிதழ் கொடுக்கும்வரையும் அரசின் கடமைகளும் பொறுப்புகளும் மலிந்து காணப்பட்டன. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொதுநல அரசானது, தனது வேலைப்பளுவை குறைத்துக்கொள்ளும் வகையில் பல்வேறு விடயங்களை தனியார் மையப்படுத்தியுள்ளது. சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு விடயங்களை தாமே மேற்கொண்டது.

இவ்வாறு பொதுநல அரசுகள் மற்றும் குறைந்தபட்ச அரசுகள் தங்களது அரசாங்க செயற்பாடுகளை தற்கால பின்னான தொழில்நுட்பத் தொடர்பாடல் சூழ்நிலைக்கேற்ப வடிவமைத்துக் கொள்கின்றன. இதனை சான்றுபகர்வது இலத்திரனியல் அரசாங்கம் மற்றும் இலத்திரனியல் அரசாட்சி செயற்பாடுகளாகும். சமகால அரசியலில் இதுவும் முக்கியமானதாகதொன்றாகக் கருதப்படுகின்றது. அரசாங்கம் மற்றும் அரசாட்சி போன்றவற்றை விளங்கிக்கொள்வதன் மூலம் இலகுவாக புரிந்துகொள்ள முடியும். அரசாங்கம் என்பது அரசின் நோக்கங்களையும் விருப்பங்களையும் நடைமுறையில் செயற்படுத்தும் ஒரு நிறுவனமாகும். அரசாட்சி என்பது ஆட்சி நடத்தி அதன் தொழிற்பாடு, அதிகாரத்தின் மூலம் கட்டுப்படுத்தும் தன்மை, கொள்கை உருவாக்கம் என்பவற்றுடன் சமூக அமைப்புகள் எடுத்துக்கொள்வதாக இருக்கும்.

அந்தவகையில் இலத்திரனியல் அரசாங்கம் என்பது ஆங்கிலத்தில் 'எலக்ட்ரோனிக் கவர்மெண்ட்' எனவும் அழைக்கப்படுகின்றது. இலத்திரனியல் அரசாங்கம் என்பது தேசிய நலனை கருத்திற்கொண்டு பொதுமக்களுக்கு அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் வழங்குவதாகும். இலத்திரனியல் அரசாங்கமானது, மரபுரீதியான பௌதீக மற்றும் காகித ஊடகங்களில் தகவல் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக கையாள்கின்றது என்பதுடன், தகவல் தொழில்நுட்பமானது மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாக வழங்குகின்றது. அதாவது மரபு ரீதியான தகவல் தொடர்பு முறைகளை தனிமைப்படுத்தல் மற்றும் தலைமைத்துவப் பாங்கு புதிய முறைகளை வகுத்து வியாபார நடவடிக்கைகளில் மாற்றங்கள், மக்களின் கருத்துகளுக்கு செவிமடுத்தல், தகவல்களை வழங்குவதில் புதிய வழிவகைகளை உருவாக்குதல் போன்றவைகளே இலத்திரனியல் அரசாங்கமாகும்.

இலத்திரனியல் அரசாங்கம் பற்றி ஐக்கிய நாடுகள் தாபனம் கருத்து தெரிவிக்கையில்,

இணையத்தளம் மற்றும் உலகளாவிய இணைய வலையமைப்பு என்பவற்றை பயன்படுத்துவதன் மூலம் நாட்டு மக்களுக்கு சேவைகளையும் தகவல்களையும் வழங்கும் ஒன்று என்கின்றது.

ஜோன்ஸ் என்பவர் இலத்திரனியல் அரசாங்கம் என்பது எவ்வாறு வினைத்திறனான வகையிலும் தகவல்களையும் சேவைகளையும் மக்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலம் வழங்குதல் என்பது குறித்து நிற்கின்றது - என்றார்.

மேலும், இலத்திரனியல் அரசாங்கம் என்பது ஒரு தொழில்நுட்ப ரீதியான செயற்பாடாகும். இது அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் இடைவினை ஏற்படுத்துதல் மற்றும் சேவைகளையும் தகவல்களையும் வழங்குதல் போன்றவற்றில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்ற ஒரு செயன்முறையாகும்.

தற்கால அரசாங்கங்கள் தங்களது தேவைகளை மக்களிடம் நேரடியாக கொண்டுசெல்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதும் தற்கால சமூகம் இலத்திரனியல் அம்சங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு காணப்படுவதாலும் அரசாங்கம் தனது அரசாட்சி செயல்முறைகளை இலத்திரனியல் அம்சங்கள் மூலம் மக்களுக்கு வழங்குகின்றது. சமகாலத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானது மக்களின் அன்றாட வாழ்வில் மிகப் பிரதான பங்கைக்கொண்டிருப்பதுடன் சேவைகள், பொழுதுபோக்கு அம்சங்கள், தகவல் பரிமாற்ற வழக்கங்கள் போன்றவற்றில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றது. இவ்வகையில் அரசியல் நடவடிக்கைகளிலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பானது மிக உயர்ந்த நிலையில் உள்ளது. மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதில் வினைத்திறனை உயர்த்த வரையறை செய்யும் ஒன்றாகவும் இலத்திரனியல் அரசாங்கம் வளர்ச்சி பெறுகின்றது.

இலத்திரனியல் அரசாங்கம் மக்களுக்கு சேவை வழங்குவதை முழு நோக்கமாகக்கொண்டு செயற்படுகின்றது. மேலும் இதனை வரையறை செய்யும்போது இலத்திரனியல் அரசாங்கமானது அரசாங்கத்திற்கும் அதனோடு தொடர்புடைய பல்வேறு தரப்பினருக்கும் இடையிலான இடைவெளி குறித்து நிற்கின்றது. அதாவது, அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு, அரசாங்கத்திற்கும் வணிகத்திற்கும் இடையிலான தொடர்பு, அரசாங்கத்திற்கும் சமய பிரிவினருக்கும் இடையிலான தொடர்பு, அரசாங்கத்திற்கும் வீட்டுக்கும் இடையிலான தொடர்பு போன்றவர்கள் இடையே உள்ள இலத்திரனியல் தொடர்பை இது குறித்து நிற்கின்றது.

ஆகவே, இலத்திரனியல் அரசாங்கம் என்பது அரசாங்கத்தின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு இலத்திரனியல் அம்சங்களை பயன்படுத்துவதாகும். தகவல்களையும் சேவைகளையும் நிலையங்களின் ஊடாக பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தின் இதர உறுப்புகளுக்கும் வழங்குவதை குறிக்கின்றது.

மின்னியல் நிர்வாகமானது, தற்காலத்தில் மிக விரைவாக வளர்ச்சியடைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. பொதுவாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இது சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மூன்றாம் உலக நாடுகளில் இதன் நடைமுறை பயன்பாடானது, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. அதாவது, செயற்பாட்டில் உள்ளது எனலாம். இன்று மின்னியல் நிர்வாகமானது, வேலைகளை அதாவது பொதுத்துறையின் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது என்று பின்வரும் நிகழ்வுகளின் ஊடாக புரிந்துகொள்ள முடிகின்றது. அதாவது, பணியாளர் மேலாண்மை மற்றும் பொது நிர்வாகத்துறைகளில் இந்தியா, சிங்கப்பூர் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பணியாளர் மேலாண்மை மற்றும் பொது நிர்வாகத்துறைகளில் இந்தியா, சிங்கப்பூர் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன் சிறப்பம்சங்கள் யாதெனில், பணியாளர், பணியிடங்கள் மற்றும் வேலை பொதுச் சபை, மனிதவள மேலாண்மை, பொதுத்துறை சீர்திருத்தம், தலைமைப் பண்பு, திறன் மேம்பாடு மற்றும் மின் ஆளுகை, டிஜிட்டல் நிர்வாகம் போன்றவற்றில் தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகளில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. புதுமையான மற்றும் சிறப்பான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி பொது நிர்வாகத்தில் உயர்நிலை மற்றும் ஒன்லைன் மூலம் அரசு சேவைகளை வழங்கவும் இந்த ஒப்பந்தம் உதவியாக இருக்கும். இதனால் தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டுவரும் இந்திய முன்னேற்ற நுழைவாயில் திட்டத்தின் ஓர் அங்கமாக இது காணப்படுகின்றது. இது சமூக மேம்பாட்டிற்கான பயனுள்ள தகவல்களையும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி வருகின்றது.

மின்னணு ஆளுகையில் அரசு நிர்வாகம் எதிர்கொள்ளும் சவால்களாக தொழில்துறை மீதான அரசின் கட்டுப்பாடுகள் மிக அதிகமாக காணப்படுகின்றமை வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் அதிகமாக காணப்படுகின்றது. தொழில்துறை மீதான அரசின் கட்டுப்பாடுகள் குறிப்பாக விலை நிர்ணயம், மூலப் பொருட்களின் மீதான அரசின் கட்டுப்பாடு மற்றும் வலுப்படுத்தக்கூடிய சட்ட நடைமுறைகள் என்பவற்றை குறிப்பிடலாம். மேலும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு, தொழில்நுட்ப கட்டமைப்பு இன்மை, நாட்டு மக்களிடையே வேற்றுமை உணர்ச்சி, அரசியல் தடை என்பது பெரும் தடையாக உள்ளது. மேலும் இலத்திரனியல் அரசாங்கம் எதிர்கொள்கின்ற சவாலாக மின்வளப் பிரிவினை, பிரிவினை தொலைத்தொடர்பு மற்றும் அதன் விளைவான இடைத்தொடர்பு ஆகியவற்றில் ஒருங்கிணைப்பு இன்மையாகும்.

• **சி.குகதாசன்**
*அரசறிவியல்துறை*
*யாழ். பல்கலைக்கழகம்*

## இன்றைய நாளில்...

- 1814 – முதலாவது மெதடிஸ்த ஆயர் தோமஸ் கோக் மதப்பரப்புனராக கப்பலில் இங்கிலாந்திலிருந்து இலங்கை வரும்வழியில் காலமானார்.
- 1851 – கொழும்பு நகரைச் சுற்றிய பகுதிகளில் பலத்த காற்று வீசியதில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 3 –ஹிட்லர் தொழிற்சங்கங்களை தடை செய்தார்.
- 1946 – கேகாலையில் நேவ்சுமயர் தோட்டத்தில் இந்தியத் தமிழர் குடியிருந்த 400 ஏக்கர் காணிகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன.

## நக்கல் நமசிவாயம்

**"மே தினம் எண்டு சொல்லுறதுக்கு பதிலா ஆண்கள் தினமெண்டு சொல்லலாம் மாடா உழைச்சு ஓடா தேயுற ஆக்கள் நாங்கள்... அண்டைக்கு எங்களை கொண்டாடோணும்"**



# நாய்கள் குரைக்கும்போது சிங்கங்கள் அஞ்சமாட்டா!

## ராஜபக்ஷக்களுடனான உறவு முறிந்ததாக கூறுகிறார் ஜீவன்

(க.கிஷாந்தன்)

ஓரணியில் திரள்வோம், ஒற்றுமையாக இருப்போம், உரிமைகளை வெல்வோம். மீண்டெழுவோம் என அறைகூவல் விடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், நாய்கள் குரைக்கும்போது சிங்கங்கள் அஞ்சுவது கிடையாது எனவும் சூளுரைத்தார்.

எமது மக்களுக்கு நில உரிமை வேண்டும். 150 வருடங்களாக நிலமற்றவர்களாக வாழ்கின்றோம். இதனை பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியாவின் உதவியும் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று (01) நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், மேலும் கூறுகையில்,

"நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் மக்கள் பக்கம் நின்றே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுத்தது. ஆனால், எமது



சமூகத்தை காட்டிக்கொடுக்கும் விதத்தில் ஒரு சிலர் செயற்படுவதால் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா என்பது எமது இலக்கல்ல என்பதை தேர்தல் காலத்திலேயே அறிவித்துவிட்டோம். கல்வியும், காணி உரிமையும்தான் பிரதான இலக்கு. அதனை அடைவதற்கே தீவிர முயற்சியில் இறங்கியுள்ளோம். எண்ணம்போல்தான் செயல் என்பார்கள், மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது கனவும்கூட. நான் பதவிக்காக அரசியல் செய்பவன் அல்லன்.

மக்களுக்கானதே எனது அரசியல் பயணம். அதனால்தான் ராஜபக்ஷ அரசுடனான உறவை முறித்துக்கொண்டு, இன்று மக்கள் பக்கம் நிற்கின்றோம். அப்படி இருந்தும் வரலாறு தெரியாத சிலர், காங்கிரஸை விமர்சித்து வருகின்றனர்.

மக்களின் தன்னெழுச்சி போராட்டத்தில் இ.தொ.கா. பட்டி அணிவிக்கப்பட்டிருந்தது குறித்தும் விமர்சிக்கின்றனர். இ.தொ.கா என்பது மக்கள் இயக்கம். மக்களை பாதுகாத்த அரசியல் இயக்கம். மக்களுக்கு உரிமைகளை வென்றுக்கொடுத்த அரசியல் கட்சி. எனவே, அதை அணிவதில் சிக்கல் கிடையாது. இதற்கு ஏன் பதிலளிக்கவில்லை என சிலர் கேட்கின்றனர். நாய்கள் குரைக்கும்போது, சிங்கங்கள் அஞ்சுவது கிடையாது.

எமது மக்களுக்கு நில உரிமை வேண்டும். 150 வருடங்களாக நிலமற்றவர்களாக வாழ்கின்றோம். இதனை பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியாவின் உதவியும் அவசியம். அதற்கான உறவு பாலமாக அண்ணாமலை இருப்பார் என நம்புகின்றேன்." - என்றார்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் திருமலையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



(ரவ்பீக் பாயிஸ்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று(01) உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கிரிஷாந்தன் தலைமையில், "அரசியல் நிலைமையை சரியான முறையில் நிறுவுங்கள்" எனும் தொனிப்பொருளில் திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று (01) காலை குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில், இன்று (நேற்று) உலகளாவிய ரீதியில் உழைப்பாளர் தினம் கொண்டாடப்படுகின்ற நிலையில் நாட்டில் பெரும்பாலான தொழிலாளர்களுக்கு அவர்களின் உரிமையை வென்றெடுக்கும் சந்தர்ப்பம் இதுவரை கிடைக்கவில்லை எனவும் மக்களின் ஆணையை ஏற்று ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியாளர்கள் மக்களின் ஆணைபடி ஜனாதிபதி உட்பட புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் என அனைவரும் தமது பதவிகளை இராஜினாமா செய்து வீடு செல்ல வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் "பொருட்களின் விலை உயர்வை உடனடியாக குறை, தோல்வியடைந்த அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும், 21ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்து, அத்தியாவசிய உணவுப் பொருட்களை தங்குதடையின்றி வழங்கு, உயிர் தரும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு உடனடி தீர்வு காண் மற்றும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை உடனடியாக பதவி விலகு" என்ற பதாதைகளை ஏந்தியவாறு அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் கிரிஷாந்தன் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டமானது, திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்லாது நாடு பூராகவும் இன்றைய தினம் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த நாட்களில் எமது கட்சியின் தலைமைகளும் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும், மக்களின் நிலைப்பாடான ராஜபக்ஷ குடும்பத்தினர் வீடு செல்ல வேண்டும் என்பதே எமது குறிக்கோளாகவும் இருக்கிறது. எனவே மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்து ராஜபக்ஷ குடும்பத்தினர் உடனடியாக தமது பதவிகளை இராஜினாமா செய்து விட்டு செல்ல வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுத்திருந்தார்.

# தீப்பெட்டிகள் – எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கல்

## வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் பெருமளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தீப்பெட்டிகள், எரிவாயு சிலிண்டர்கள் என்பன பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மீட்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட பாவனையாளரிடமிருந்து கிடைத்த எரிவாயு தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் பாவனையாளர் அதிகார சபையினரால் வெள்ளிக்கிழமை(27) மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது வர்த்தக நிலையத்தில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்ட மற்றும் பதுக்கி வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள் பொலிஸாரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டு சரியான விலைக்கு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அவ் வர்த்தகருக்கு எதிராக வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

மேலும் இவ்வாறாக எரிவாயுவினை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்தல் மற்றும் பதுக்கி வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை வர்த்தகர்களுக்கு பாவனையாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது.





கொழும்பு, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள 'மைனா கோ கம'வில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று (01) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்

# இராணுவத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?

## மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்

(மன்னார் நகர் செய்தியாளர்)



மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து கடந்த 30ஆம் திகதி காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டமானது, மார்ச் 23ஆம் திகதியன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மீது அரச படையினர் மேற்கொண்ட அராஜகத்தை எதிர்த்து இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அரசே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதில் சொல், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, சர்வதேச விசாரணை வேண்டும், இராணுவத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?, 20ஆம் திருத்தத்தை நீக்கு" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா,

நாங்கள் இன்று நேற்று இந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. கடந்த 12 வருடங்களுக்கும் மேலாக உறவுகளை தொலைத்த தாய்மார்கள் வீதிகளில் நின்று போராடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த அரசாங்கம் இதுவரையில் எமக்கான நல்ல ஒரு முடிவை கூறவில்லை. அதனால் இலங்கை அரசில் நம்பிக்கை இல்லாமல் சர்வதேசம் எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என்று கேட்கின்றோம்.

ஆனால், இந்த சர்வதேசமும் கண்விழித்து பார்க்கவில்லை. இப்படியாக இருக்கும் சூழ்நிலையில் நாங்கள் யாரிடம் போய் நீதியை கேட்பது? இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து நின்று சர்வதேசமும் வேடிக்கை பார்க்கிறதா? எனும் கேள்வி எழுகிறது.

கண்முன்னே கைகளால் ஒப்படைத்த உறவுகளை தொலைத்துவிட்டு இன்று நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இலங்கை அரசோடு சேர்ந்து இந்த சர்வதேசமும் வேடிக்கை பார்க்கிறது.

உறவுகளை கொன்று குவித்த அரசாங்கத்திடம் தான் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த அரசாங்கத்தில் இருக்கும் ஜனாதிபதிக்கு காது மந்தம் ஏனென்று சொன்னால் நாங்களும் நீதியை கேட்டு கேட்டு களைத்து போய் விட்டோம். ஆனால் காது மந்தமாகி கற்களைப்போல ஜனாதிபதியும் பிரதமரும் இருக்கிறார்கள். ஆனால் எமது உயிர் உள்ள வரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடிக் கொண்டு இருப்போம் என அவர் தெரிவித்தார்.

# தமிழர் கட்டமைப்பிற்கான ஒருங்கிணைப்புக் குழுவில் பல்துறை ஆளுமைசார் செயற்பாட்டாளர்கள் கருத்து பரிமாற்றம்



வட கிழக்கு சிவில் சமூக செயற்பாட்டளர்கள் ஒன்றிணைந்து யாழ். இலங்கை வேந்தன் மண்டபத்தில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பிற்கான ஒருங்கிணைப்புக் குழுவை அங்குரார்ப்பணம் செய்து தற்போதைய இலங்கைத் தீவின் நெருக்கடியில் தமிழரின் வகிபாகம் தொடர்பாக ஆராய்ந்தனர்.

வடக்கு கிழக்கு சார்ந்த சைவ ஆதீன முதல்வர்கள், கத்தோலிக்க குரு முதல்வர்கள், சமய, சமூக, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பல்கலைக்கழகம் சார் பேராசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள், மருத்துவர்கள், பொறியியலாளர், வங்கியாளர், ஊடகவியலாளர், கல்வி புலம் சார்ந்தோர் என பல்துறை ஆளுமைசார்



செயற்பாட்டாளர்கள் தமது கருத்துகளை பரிமாற்றிக்கொண்டனர்.

தமிழ்த் தேசியம் சார்ந்து பொருளாதார நெருக்கடியை எவ்வாறு அணுகுவது, சிங்கள மக்களிற்கு, சர்வதேசத்திற்கு இந்த தருணத்தில் தமிழ் மக்கள் ஓர் திரட்சியாக எவ்வாறு எம் அடிப்படை அரசியல் பிரச்சினைகளை கொண்டு சேர்ப்பது, பொருளாதாரப் பிரச்சினைக்கு மூலவேர் காரணமான தமிழ் மக்களின் மீதான அடக்கு முறைகளிற்கான தீர்வை பெற்றுக் கொள்ள சிங்கள மக்களிடையே மனமாற்றத்தை தூண்டல், சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என பல கோணங்களில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

ஈற்றில் வடகிழக்கு தழுவிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருங்கிணைப்புக்குழு தெரிவு செய்யப்பட்டது.

"தொடர் கலந்துரையாடல்கள் வாயிலாக தென்னிலங்கை சிங்கள மக்களிற்கான செய்தியான உங்களை புரிந்து கொள்கின்றோம்: எங்களை புரிந்து கொள்ளுங்கள்" எனும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒருமித்த குரலாக கொண்டு சேர்க்கும் வேலைத்திட்டங்களை பல தளங்களில் தொடர்ச்சியான கருத்தாடல்களுடன் முன்கொண்டு செல்வதாக தீர்மானிக்கப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது.









முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கடந்த 1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்து 29 வருட நிறைவு அனுஷ்டிப்பு, கொழும்பு, புதுக்கடை கட்டடதொகுதிக்கு அருகிலுள்ள பிரேமதாச நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இந்நிகழ்வு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – லலித் பெரேரா)

# உழைப்பாளர் தினத்தில் நுவரெலியா மாநகர சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்






(செ.திவாகரன், எஸ்.தியாகு)

உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினமாக மே தினம் கொண்டாடப்படுகிறது. போராடினால் வெற்றியடைய முடியும் என்பதை உறுதிப்படுத்தி அத்தகைய மகத்தான தினத்தில் நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருணாரட்ன தலைமையில் நகரசபை ஊழியர்கள் இணைந்து இப்போராட்டத்தை நேற்று (01) முன்னெடுத்திருந்தனர்.

நுவரெலியா மாநகர சபை கட்டடத்திற்கு முன்பாக ஆரம்பித்த குறித்த போராட்டமானது, பிரதான வீதியினூடாக பேரணியாகச் சென்று நுவரெலியா பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி மீண்டும் மாநகர சபை கட்டடம் வரை சென்றது.

"தொழிலாளர்களை விழுங்கும் விலைவாசி, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை, இதன் காரணமாக நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது, விலை அதிகரிப்பினால் மேலெழும்பும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள்" என தெரிவித்தும் இதற்கு உடனடியாக அரசாங்கம் தீர்வை வழங்க வேண்டும் எனவும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

# கம்பளை நகரில் மே தின போராட்டம்





(கம்பளை யோகா)

மே 1ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படும் நிலையில், நேற்றைய தினம் மலையகத்திலும் பெரும்பாலான இடங்களில் தமது உரிமைகளையும் சலுகைகளையும் கோரி தொழிலாளர்களால் பேரணிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

அந்தவகையில், கம்பளை நகரில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

கம்பளை புகையிரத நிலையத்திற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டத்துக்கு கம்பளை நகர வர்த்தகர்கள் தங்கள் வியாபார நிலையங்களை மூடி ஆதரவு வழங்கியிருந்தனர். பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

போராட்டக்காரர்கள் தலையில் கறுப்புப் பட்டிகளை அணிந்து கறுப்புக் கொடிகளை கையில் ஏந்தியவண்ணம் கறுப்பு ஆடை அணிந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு சுமார் 2,500இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.







**ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மஸ்கெலியா தமிழ்ப் பிரிவு அமைப்பாளர் எஸ்.பிரபாகரனின் ஏற்பாட்டில் நேற்று 1ஆம் திகதி ஹட்டன் மல்லியப்பு சந்தியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

**'அடக்குமுறை அரசாங்கத்திற்கு எதிராக' எனும் தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 45 நிமிடங்களுக்கு நீடித்தது. இதன்போது எதிர்ப்பு கோஷங்களும் எழுப்பப்பட்டன.**

(மனுர சுதத் செல்லஹேவா)

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மே தினத்தை கறுப்புத்தினமாகக் கொண்டாட ஆட்சியாளர்கள் வழியமைத்துவிட்டனர்

## கினிகத்தேனை ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிப்பு

(கினிகத்தேனை நிருபர்)

அரசுக்கு எதிராகவும் நாட்டின் ஜனாதிபதி பதவிவிலகக் கோரியும் வட்டவளை மௌன்ஜீன் தோட்ட இளைஞர், யுவதிகளினால் நேற்று 1ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மௌன்ஜீன் தோட்டத்திலிருந்து பேரணியாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டமானது, தியகல சந்திக்கு வந்த பின்னர் ஹட்டன் பிரதான வீதியூடாக வட்டவளை நகரத்தை நோக்கிச் சென்றது.

இதன்போது, "இந்த அரசாங்கம் எமக்கு வேண்டாம், உகண்டாவில் உள்ள கறுப்புப்பணம் எங்கே, தோட்டத் தொழிலாளர்களை சுரண்டி பிழைத்தது போதும், அடிப்படைச் சம்பளத்தை அதிகரி, நாட்டு நிலைமை என்னாச்சி" போன்ற கோஷங்களையும் எழுப்பினர்.





குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்,

மலையக அரசியல்வாதிகள் நடுநிலை வகிப்பதாக கூறியது ஒரு போலியான நாடகம் என்பதோடு, மக்களிடத்தில் ஒரு நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கின்றனர். நாட்டில் விலைவாசி உயர்வுக்கேற்ப தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும். மேலும், இன்று (நேற்று) தொழிலாளர்களின் மே தினம் கொண்டாடப்படுகின்றது. அது கூட விலைவாசி உயர்வு மற்றும் மக்கள் நிம்மதியிழந்து தவிப்பு ஆகிய காரணங்களினால் மே தினத்தை கறுப்புத் தினமாகக் கொண்டாட ஆட்சியாளர்கள் வழியமைத்துள்ளனர் - என்றனர்.

# ராகலையிலிருந்து நடைபயணம்

(செ.திவாகரன்)

நாட்டில் தற்போது நிலவிவரும் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் உள்ளிட்ட தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கும் தீர்வுகோரி உடபுசல்லாவைச் சேர்ந்த




மணிவேல் சத்தியசீலன் கடந்த 30ஆம் திகதி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

'உரப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, எரிவாயு மற்றும் பொருட்களின் விலை உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி காலை 9.30 மணியளவில் ராகலையில் மத வழிபாடுகளின் பின்னர் நுவரெலியா, ஹட்டன், கினிகத்தேனை, அவிசாவளை வழியாக கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

மக்கள் குறித்த நடைபயணத்துக்கு ஆதரவு தெரிவித்து சத்தியசீலனை உற்சாகப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வருமானத்தை ஈட்டித் தருகின்றவர்களுக்கு இந்த ஆட்சியில் நிம்மதியற்ற வாழ்க்கை

## மத்திய மாகாண முன்னாள் உறுப்பினர் ஸ்ரீதரன்

"நாட்டுக்கு டொலர் வருமானத்தை ஈட்டித் தருகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு நிம்மதியாக வாழமுடியாத நிலைமை இந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ளது" - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மே தினத்தை முன்னிட்டு தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன் தலைமைப் பணிமனையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகள் மற்றும் கொடியேற்றும் நிகழ்வுகளைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பிலிப், தொழிலாளர் தேசிய முன்னணியின் உப தலைவரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான மு.ராம், ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் தொழிலாளர் தேசிய



சங்கத்தின் உறுப்பினர்களான பாலசுப்ரமணியம், திருமதி ராமேஸ்வரி மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்த தினமாக உலகெங்கும் மே தினம் நினைவுகூரப்படுகின்றது. அந்தவகையில் மே தினத்தை தொழிலாளர் தேசிய சங்கம் ஓர் உன்னத தினமாகக் கருதி ஒவ்வொரு வருடமும் அனுஷ்டித்து வருகின்றது. 1965ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அமரர் வி.கே.வெள்ளையனால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனமே தொழிலாளர் தேசிய சங்கமாகும். தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஊடாக கடந்த காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப இம்முறை தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின நிகழ்வுகள் தோட்ட வாரியாகவும் பிரதேச வாரியாகவும் கொண்டாடப்பட்டன.

தற்போதைய முறையற்ற ஆட்சி காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் உட்பட நாட்டின் சகல மக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும் எனக் கோரி நடைபெறுகின்ற போராட்டத்திற்கு தொழிலாளர் தேசிய சங்கம் தனது ஆதரவை வழங்கியுள்ளது. தொழிலாளர்களின் உரிமைக்காக தொழிலாளர் தேசிய சங்கம் தொடர்ந்து போராடும் என்பதை இந்த மே தினத்தன்று நாங்கள் உறுதி கூறுகின்றோம் - என்றார்.









**இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மேதின ஒன்றுகூடல் நிகழ்வு கொட்டகலையில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது வளாகத்தில் நேற்று 1ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாக தமிழக பா.ஜ.கட்சியின் தலைவர் அண்ணாமலை கலந்துகொண்டிருந்தார். நிகழ்வில், இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், கட்சியின் தவிசாளர் ராமேஸ்வரன் மற்றும் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். மேலும், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவித் தொகையும் வழங்கப்பட்டது.**

(பி.கேதீஷ், க.கிஷாந்தன்)

# உரத்தை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை

## விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

(ஹாலி-எல செய்தியாளர்)

இறக்குமதி செய்யப்படும் உர வகைகளின் விலையை குறைக்கும் நோக்கில் குறித்த நிறுவனங்களுக்கு விலை சூத்திரத்தை அறிமுகப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலன்னறுவை மாவட்ட விவசாய அமைப்புக் களின் பிரதிநிதிகளுடன் நேற்று (01) விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



பெரும்போகத்துக்குத் தேவையான அனைத்து இரசாயன உரங்களையும் வழங்குவதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உரங்களை இறக்குமதி செய்து தனியாரால் அதிக விலைக்கு விற்பனை செய்வதால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இரண்டு அரச உர நிறுவனங்களின் ஊடாக இரசாயன உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு சலுகை மற்றும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யப்படும் என்றார்.

சந்தையில் இரசாயன உரங்களின் விலையை குறைக்க வேண்டும். உரத்தை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு உர விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




அரசாங்கத்தை உடனடியாக பதவிவிலகுமாறு வலியுறுத்தி தொழிலாளர் தினமான நேற்று (01) ஹட்டனில் பேரணியும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: மனுர சுதத் செல்லஹேவா)

# கேகாலை மாவட்டத்தில் இடம்பெறவுள்ள முதலாவது இலக்கியக் களம்

(அவிசாவளை நிருபர்)

கேகாலை மாவட்டத்தில் முதலாவது இலக்கியக் களம் நாளை 03ஆம் திகதி எஹெலியகொடை தமிழ் வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

இவ்விலக்கிய சந்திப்பின் பொருளாக மலையக இலக்கியத்தில் படைப்பும், படைப்பாளிகளும், படைக்கப்படும் கதை மாந்தர்களும், கதை ஏற்படுத்தும் தாக்கமும் மாற்றமும் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எஹெலியகொடை பாடசாலை சமூகம் மற்றும் கிளிநொச்சியை தளமாகக்கொண்டு இயங்கும் காவேரி கலாமன்றம் மற்றும் வவுனியாவை தளமாகக்கொண்டு கொண்டு இயங்கும் ஜே.ஆர்.எஸ். நிறுவனங்களின் ஆதரவுடன் நடக்கும் இந்நிகழ்வின் முதற்கட்டமாக, கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தின் அனுசரணையுடன் பாடசாலையில் கல்விகற்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் கல்வியைக் கருத்தில்கொண்டு மறுசீரமைக்கப்பட்ட ஐந்து வீடுகளின் கையளிப்பு இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து இலக்கியச் சந்திப்பானது மலையகத்தின் மூத்த படைப்பாளியும் சாகித்ய ரத்னா விருது பெற்றவருமான மு. சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வின் வரவேற்புரையை எஹெலியகொடை தமிழ் வித்தியாலய அதிபர் ராசையா தெய்வராஜ் வழங்க, கருத்துகளை பகிர்பவர்களாக "என் எழுத்துகளால் நான் கண்ட சமூக மாற்றம்" எனும் தலைப்பில் மலையக எழுத்தாளர் மொழிவரதனும், சிறுகதை எழுத்தாளரும் ஆசிரியருமான சிவனு மனோகரனும், அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஏ.சீ.ஆர். ஜோன் ஆகியோரும் வழங்க, "செயற்பாட்டு இலக்கியத்தின் சிந்தனையும் செயற்பாடும்" எனும் தலைப்பில் காவேரி கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குனர் வண. டி.எஸ். யோசுவா வழங்கவுள்ளார்.

அடுத்து, அருட்பணி பெனி. யே.ச. எழுதிய "ஒரு தோட்டம் ஒரு பள்ளிக்கூடம் சில வீடுகள்" எனும் நாவலின் மதிப்பீடு இடம்பெறும். இதனை கிளிநொச்சி கலைமகள் தமிழ் வித்தியாலய அதிபர் பெருமாள் கணேசனும், நுவரெலியா பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சுதாஜினியும் வழங்குவர்.

நிகழ்வின் இறுதியாக ஆசிரியை மோகனப்பிரியா தயாரித்து அளிக்கும் எழுச்சிப்பாடல் இறுவெட்டு வெளியீடும் இடம்பெறவுள்ளது. சிறப்பு அதிதிகளாக சப்ரகமுவ மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பி.ஜேசுப்பிள்ளை, அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அத்தோடு தலைமுறை காப்போம், இரத்தினபுரி உதவும் கரங்கள், கேகாலை விழித்தெழு அறக்கட்டளை ஒன்றியம், அகரம் ஆகிய சமூக அமைப்புகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளன.

# 40 ஆயிரம் ரூபாவுக்கு உரம் விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு

(மாத்தளை செய்தியாளர்)

தம்புள்ளை மற்றும் அதனை சூழவுள்ள சிறு நகரங்களின் தனியார் நிறுவனங்களால் பசளை விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் 50கிலோ கொண்ட ஒரு பசளை உரையின் விலை 40 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும் பசளை விநியோகஸ்தர்கள் தங்களை வேண்டியுள்ளதால் தாங்கள் பெரும் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை நகரம் மாத்திரமல்லாமல், நாட்டின் நாளா திசைகளிலும் கடந்த காலங்களில் யூரியா பசளைக்கு மாபெரும் தட்டுப்பாடு நிலவியமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த நகரிலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் யூரியா பசளை விநியோகஸ்தர்களுக்கு பசளை கிட்டியுள்ளதாகவும் 50கிலோ கொண்ட பசளை மூடையொன்றை 40 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யவேண்டுமென விடுக்கப்பட்ட வேண்டுகோளினால் விவசாயிகள் பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பசளை விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கடந்த காலங்களில் பசளை விநியோகஸ்தர்கள் காசோலைகளை வழங்கி பசளை உட்பட ஏனைய விவசாயப் பொருட்களை கொள்வனவு செய்துகொண்டாலும் தற்பொழுது பசளையை பெற்றுக்கொள்ள உடனடியாக மொத்த பணத்தையும் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால் கடந்த காலங்களை போன்று பசளைகளை கொள்வனவு செய்து கொள்ள முடியாத நிலையில் எமது வர்த்தகத்துறை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் ஒரு குறிப்பிட்ட சிறு தொகை பசளைகளையே எம்மால் கொள்வனவு செய்யமுடியுமெனவும் இதனால் பாதிக்கப்படுவது விவசாயிகள் என்பதாகவும் சிறுவர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

பசளையை கொள்வனவு செய்வதற்காக வேண்டி வரும் விவசாயிகளிடம் பசளையின் விலை 40 ஆயிரம் ரூபா என விலையை கூறியதும் விவசாயிகள் திரும்பி செல்வதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவிக்கும் விவசாயிகள், 50கிலோ கொண்ட ஒரு பசளை உரையை 40 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்து எமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டால் விவசாயத்துறையில் நாம் எதிர்நோக்கும் இலாபங்களை அடைய முடியாது எனவும் அதிக செலவு செய்து செய்கின்ற விவசாயத்தால் பாரிய நட்டங்களுக்கு முகம் கொடுப்பதைவிட விவசாயத்துறையை முற்றிலும் கைவிட்டுவிடுவது சால பொருந்தும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் பங்கேற்புடன் இராணுவ தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை (29) நடைபெற்ற இராணுவ தலைமையகத்தில் சேவையாற்றும் முஸ்லிம் அதிகாரிகள் மற்றும் ஏனைய சிப்பாய்களும் நோன்பு திறக்கும் இப்தார் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்.

உலக அளவில் முஸ்லிம்களால் கொண்டாடப் படும் இந்த பண்டிகையை முன்னிட்டு இராணுவ முஸ்லிம் சங்கத்தினால் இராணுவ தலைமை யகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு நல்லிணக்கம் மற்றும் நல்லெண்ணத்தின் அடை யாளமாக அமைந்திருந்ததோடு, இதன்போது நாடு செழிப்புற வேண்டி ஆசிர்வாதங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

சில வருடங்களுக்கு முன்பாக ஜெனரல் ஷவேந்திர சில்வா இராணுவத்தின் நிறைவேற்று அதிகாரியாக நியமனம் வகித்த காலப் பகுதியில் இராணுவத்திலுள்ள முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைவதற்காக "இப்தார்" தின நிகழ்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இவ்விழாவில் கலந்து கொண்ட மௌலவிகள் இராணுவத்தினரை பாராட்டியதோடு, இது அனைத்திலும் மிகச் சிறந்ததாகவும் நேர்த்தியாகவும் நடந்ததாகக் கூறினர். "இராணுவத் தளபதி மற்றும் படையினர் யுத்த காலங்களில் ஈடு இணையற்ற சேவையை வழங்கினர். மேலும் மிக சமீபத்திய கொவிட் -19 தொற்றுநோய்களின் போது அவர்களது ஆதரவு சரியான நேரத்தில் முறையாக கிடைக்காவிட்டால், நாங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவோம். இராணுவத்தின் பாத்திரங்களுக்காக பாராட்டப்பட வேண்டும்," என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந் நிகழ்வின் வரவேற்புரையை பிரிகேடியர் அஸ்கர் முத்தலிப் நடத்தினார். மௌலவி, வண. மொஹமட் இர்ஸாத் மற்றும் மௌலவி வண. சப்ராஸ் இக்பால் ஆகியோர் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் ஆற்றிய இரண்டு சுருக்கமான உரைகளில் 'இப்தார்' சடங்கு என்றால் என்ன என்பதையும், வாழ்க்கை நடத்துவதற்கான அதன் அர்த்தத்தையும் விளக்கினர்.

இப்தார் நோன்பு திறப்பதற்கான தொழுகைக்குப் பின்னர் இந்நிகழ்வின் பிரதம அதிதியாக, இராணுவத் தளபதி, இராணுவ பதவி நிலைப் பிரதானி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, இராணுவ முஸ்லிம்கள் சங்கத்தின் தலைவர் பிரிகேடியர் அஸ்கர் முத்தலிப் மற்றும் பங்குபற்றியோர் நடைமுறையை அடையாளப்படுத்தும் சிற்றுண்டி விருந்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இவ் வைபவத்தின் போது 'இப்தார்' சடங்குகளை நடத்திய இரு மௌலவிகளுக்கும் இராணுவத் தளபதியினால் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் லெப்டினன்ட் கேர்ணல் ஜே.கே. ஜலால் நன்றியுரையாற்றினார்.

இராணுவ சேவை திருமதி சுஜீவா நெல்சன், இராணுவ சேவை வனிதையர் பிரிவின் உபதலைவி திருமதி ஜானகி லியனகே, இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களின் மனைவிமார் சிப்பாய்கள் குழுவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.




அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பலாங்கொடை, கந்தெகொடவில் பொதுமக்கள் நேற்று (01) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: ஆர். எஸ். தர்மதாச)



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீட்சிப்பெற்று அமைதியான சூழல் நிலவுவதற்கு நோன்பாளிகள் பிரார்த்தனை பறகஹதெனிய பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நோன்பு திறக்கும் இப்தார் விசேட நிகழ்வு பள்ளிவாசலின் நிர்வாக சபையின் தலைவர் ஜெஸ்மின் ஹாபிஸ் தலைமையில் இடம்பெற்றது. (இக்பால் அலி)



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலகுமாறு கோரி பலாங்கொடை வேவெல்வத்த பகுதியில் நேற்று (01) பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: என்.எஸ். பிரியநந்தன)

திகதி 30.04.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4748 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,862,730.00 — ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 3 8 7 7 5 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,797,283.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1240 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,978,700.00 — வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 0 1 2 1 8 3 — அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,105,832.40

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 778 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,160,260.00 — வெற்றி இலக்கினம் F — வெற்றி இலக்கங்கள் 09 13 21 59 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,405,678.80

ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0057 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,510,240.00 — இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 05 09 18 41 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,090,719.00

கோடி 24 + Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1096 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,333,560.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 249,887,430.00 — II 12 47 48 53 76 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

திகதி 29.04.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4747 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,212,420.00 — ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 4 6 1 0 6 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,097,617.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 777 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,081,980.00 — வெற்றி இலக்கினம் W — வெற்றி இலக்கங்கள் 09 20 44 51 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,405,678.80

ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0056 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,151,260.00 — இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 09 37 48 55 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,036,197.20

கோடி 24 + Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1095 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,030,740.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 249,562,402.00 — II 24 04 15 17 51 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk தொலைநகல்: 011-4669475 Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பள்ளிமுனை கிராம மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு









(மன்னார் நகர் நிருபர்)

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மன்னார் பள்ளிமுனை கிராம மக்கள் பள்ளிமுனை கடற்கரைக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (1) காலை 8 மணியளவில் அடையாள கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

"தொழிலாளர்களின் உரிமை மதிக்கப்படவேண்டும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும், இலங்கையில் தீர்க்கமுடியாமல் காணப்படும் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படவேண்டும்" போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பள்ளிமுனை மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் பள்ளிமுனை லூசியா ஆலய பங்குத்தந்தை அருட்சகோதரிகள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ, மன்னார் நகர சபை உப தலைவர் ஜோன்ஸன் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

"ஆட்சியாளர்களே அப்பாவி பொதுமக்களின் வாழ்க்கையை நசுக்காதீர்கள், குழந்தைகளுக்கான பால்மா எங்கே, தொழிலாளர்களின் பட்டினி நிலைக்கு பதில் சொல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, விலை உயர்வு உனக்கு என்ன விலையாட்டா, கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை வழங்க ஆவனஞ் செய், திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நிறுத்து, மன்னார் வளைகுடாவில் கடல்வளங்களை அழிக்காதே, வலிந்து காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே" போன்ற பல்வேறு உணர்ச்சி ரீதியாக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கவனயீர்ப்புப் போராட்டதை முன்னெடுத்தனர்.

# ஊடகவியலாளர்களான சிவராம், ரஜீவர்மன் நினைவுதினம் யாழில் அனுஷ்டிப்பு









(யாழ். நிருபர்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம், ரஜீவர்மன் ஆகியோரின் நினைவு தினம் யாழ். ஊடக அமையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராமின் 17ஆம் ஆண்டு நினைவு தினமும், ரஜீவர்மனின் 15ஆம் ஆண்டு நினைவு தினமும் யாழ். ஊடக அமையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (29) மதியம் 12 மணியளவில் இடம்பெற்றன.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்குஅருகில் வைத்து வெள்ளை வானில் வந்தஇனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றிவந்த வேளை, கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வடமராட்சி கடற்றொழிலாளியின் படகு மீது மோதி விபத்தை ஏற்படுத்திய கடற்படை படகு



(யாழ். நிருபர்)

வடமராட்சி கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவரின் படகு மீது கடற்படைப் படையினரின் படகு மோதி விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கடற்றொழிலாளர்கள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன், சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேவராசா தேவகுமார் என்பவரது படகே சேதமடைந்துள்ளது. படகு சேதமடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்த கடற்றொழிலாளிகள் இருவரையும் சில நிமிடங்கள் கழித்து கடற்படையினர் படகுடன் இழுத்து வந்து கரை சேர்த்துள்ளனர்.

தமது படகு மீது கடற்படையின் அதிவேகப் படகு ஏறிச் சென்றது என்று கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் கடற்படையின் படகு மோதியதனால் தனது படகு மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளதாகவும் 10 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# யாழ். பல்கலையில் மூன்று பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவருமாக மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் (30) காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இந்த பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, மருத்துவ பீடாதிபதியும், சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் இ. சுரேந்திரகுமாரன் சமுதாய மருத்துவத்துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. பிரதீப்காந் கணக்கியலில் பேராசிரியராகவும், மனிதவள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜே.றொபின்சன் மனிதவள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# தராக்கி சிவராமின் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு







(வவுனியா நிருபர்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமின் 17ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை (29) வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழறிஞர் தமிழருவி த.சிவகுமாரன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் இரவீந்திரன், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தராக்கி சிவராமின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, தீபமேற்றியும் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தராக்கி சிவராம் தொடர்பான நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றிருந்தன. சங்கத்தின் முக்கியஸ்தர் கி. வசந்தரூபனால் நன்றியுரையும் நிகழ்த்தப்பட்டது.

# யாழ்ப்பாண பிரதேச செயலகப் பண்பாட்டு விழா






















வடமாகாண பண்பாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை (29) யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (யாழ். நிருபர்)

# மோதலுக்குப் பிந்தைய நல்லிணக்கம் குறித்து அமைச்சர் பீரிஸ் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்



மோதலுக்குப் பிந்தைய நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மற்றும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்தை தூதுவர்கள் குழுவுடனான சந்திப்பின்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட கணிசமான திருத்தங்கள் மற்றும் பயங்கரவாதத்தின் சமகால பரிமாணங்களுக்கு ஏற்ப அதனைக் கொண்டு வருவதற்கு விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்தார்.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை ஜனாதிபதி நடத்திய சந்திப்பு மற்றும் நிலம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதிகளின் பிரச்சினைகள் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களைப் பாதிக்கும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கையை சுட்டிக்காட்டிய அவர், விரிவான ஆலோசனைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

சிவில் சமூக அமைப்புகளுடனான கூட்டுறவை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தேசிய தன்னார்வத் தொண்டு நிறுவன செயலகத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான சமீபத்திய தீர்மானம் ஆகியன குறித்து குறிப்பிடுகையில், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொள்ளும் வழக்கமான உரையாடல் மற்றும் அவர்களின் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்கான அர்ப்பணிப்பு குறித்து அமைச்சர் பீரிஸ் தூதுவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

கடந்த ஆணைக்குழுக்களின் கண்டறிதல்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழிகளை மதிப்பிடுவதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் நிலைமை மற்றும் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை அரசியல் சாசனத்திற்கு அமைவாக எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந் நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

# அஹ்மத் சாதிக் – லித்வேனியா தூதுவர் சந்திப்பு

இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் இலங்கைக்கான லித்வேனியாவின் தூதுவர் ஜூலியஸ் பிரணவிசியஸை அண்மையில் சந்தித்தார்.



இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான லித்வேனியாவின் தூதுவர் ஜூலியஸ் பிரணவிசியஸ் மற்றும் இலங்கைக்கான லித்வேனியாவின் பணிப்பாளர் காஞ்சன கொடிதுவக்கு ஆகியோர் அண்மையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இச்சந்திப்பில் இலங்கை இளைஞர்களுக்கான உயர்கல்வி, விளையாட்டு, சிறு முயற்சியாண்மை மற்றும் தலைமைத்துவ திறன்கள் விருத்திக்கான வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின்போது, லித்வேனியாவின் அரசியல் துறையில் இளைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாக தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

லித்வேனியா மற்றும் இலங்கைக்கான இராஜதந்திர உறவானது, 25 வருடங்களாக சிறந்த முறையில் பேணப்பட்டு வருகின்றது.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு களைகட்டிய வியாபார நடவடிக்கைகள்

(ரஸீன் ரஸ்மின்)





ஈதுல் பித்ர் புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு புத்தளம் மாவட்டத்தில் பெருநாள் வியாபாரங்கள் களைகட்டியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தளம், மதுரங்குளி மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளில் வியாபாரம் களைகட்டியுள்ள நிலையில், முஸ்லிம்கள் மிகவும் ஆர்வத்துடன் நகர வர்த்தக நிலையங்களுக்குச் சென்று புத்தாடைகள் மற்றும் பெருநாளைக்குத் தேவையான சிற்றுண்டிகள், பொருட்கள் என்பனவற்றை கொள்வனவு செய்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, புத்தளம் நகரில் பகல் மற்றும் இரவு நேரங்களிலும் விசேட பெருநாள் சந்தை ஒன்றும் நடத்தப்பட்டு வருவதுடன், பெரும் எண்ணிக்கையிலான வர்த்தக நிலையங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த இரவு நேர விசேட பெருநாள் சந்தையில் பகல் நேரங்களை விட இரவு வேளையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கற்பிட்டி, மதுரங்குளி, பாலாவி, நுரைச்சோலை, கரைத்தீவு உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்தும் மூவின மக்கள் அதிகளவிலானோர் வருகை தருகின்றனர்.

அத்துடன், புத்தளம் நகரிலுள்ள புடவைக் கடைகளிலும் என்றும் இல்லாதவாறு இம்முறை அதிகளவிலான மக்கள் புத்தாடைகளை கொள்வனவு செய்து வருகின்றனர்.

தற்போது கடும் உஷ்ண நிலையுடன் கூடிய காலநிலை காணப்பட்டாலும் வியாபாரம் சுமுகமான முறையில் இடம்பெறுவதாக புத்தளம், கற்பிட்டி மற்றும் மதுரங்குளி பகுதியிலுள்ள வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை மக்களுக்கு 123 கோடி ரூபா உதவி; தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு உலகப் பாராட்டு

## - ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இலங்கை தமிழர்களுக்கு அல்ல, இலங்கை மக்களுக்கு 123 கோடி ரூபா உதவிகளை வழங்கிய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு உலகப் பாராட்டுகள் குவிந்துள்ளன என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக முதல்வராக பொறுப்பேற்றது முதல் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை குறிப்பாக அவர்கள் தங்குவதற்கு அடுக்குமாடி குடியிருப்புகள் போன்ற எண்ணற்ற திட்டங்களை சொல்லி கொண்டே போகலாம்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கை மக்களுக்கு தமிழகத்திலிருந்து 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் மா பவுடர், மருத்துவ உபகரணங்கள் என 123 கோடி ரூபா மதிப்பில் பொருட்களை அனுப்புவது குறித்து கடந்த 29ஆம் திகதியன்று தமிழக சட்டப்பேரவையில் ஒரு தனி தீர்மானம் தாக்கல் செய்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்த தீர்மானத்தை அனைத்து கட்சியின் ஆதரவுடனும் ஒருமனதாக நிறைவேற்றியுள்ளார்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது"



என்ற திருக்குறளுக்கேற்ப, தேவையான நேரத்தில் உடனடியாக உதவி செய்வதற்கு முன்வந்துள்ளது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

அண்டை வீட்டுக்காரன் பசித்திருக்கையில் தான் வயிறு நிரம்பி சாப்பிடுபவர் நம்மை சேர்ந்தவர் அல்ல என்ற நபி மொழிக்கேற்ப, நமக்கு அருகில் இருக்கின்ற நாட்டு மக்கள் துன்பப்படக்கூடாது என்ற நிலையில் இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 'இலங்கை தமிழர்கள்' என்று சுயநலம் இல்லாமல் 'இலங்கை மக்கள்' என்று அறிவிப்பில் குறிப்பிட்டு இருப்பது யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பழமொழியை உறுதிப்படுத்தியிருக்கிறது.

தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் விளைவாக, மக்களை பிரித்து பார்க்காமல் அனைவருக்கும் உதவிகள் செய்ய முன்வந்துள்ளமை உலக அளவில் அனைவருடைய பாராட்டையும் பெற்றுள்ளது.

சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய உடன் இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப உரிய அனுமதி வழங்க தேவையான அறிவுரைகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உடனடியாக வழங்கக்கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

எடுத்த காரியங்களை செவ்வனே முடிப்பதில் தளபதி மு.க. ஸ்டாலினுக்கு யாரும் நிகராக இல்லை என்பதை நிரூபித்து காட்டியுள்ளார். இலங்கை மக்கள் சார்பாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பிலும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன் என்றார்.

# நிதானத்துடனும் பொறுமையுடனும் பெருநாளை கொண்டாட வேண்டும்

## வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் வாழ்த்து

(இக்பால் அலி)

இன்று எமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து வாழ் முஸ்லிம்களுக்கும் இனிய நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அவர் புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இன்று பெருநாள் கொண்டாட வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து பெருநாள் கொண்டாட வேண்டிய இரு இக்கட்டான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஸகாத்தினை உரிய முறையில் பங்கிட வில்லை என்றால் மறைத்த பெருநாளுக்கு ஒப்பானதாக இருக்கும். தங்களிடத்தில் இருந்த அனைத்து பொருளாதாரத்தையும் சுருட்டி நெருப்பிலான மாலையாகப் போட்டு அவர் மறுமையில் எழுப்பப்படுவார் என்று கூறப்படுகின்றது. எங்களுடைய பொருளாதாரத்தின் தூய்மை நாங்கள் வழங்குகின்ற ஸகாத்திலேதான் தங்கியிருக்கிறது.

எனவே, ஸகாத் எமது வாழ்க்கையை தூய்மையாக்குகிறது. பொருளைத் தூய்மையாக்குகிறது. குடும்பங்களின் உறவை மேன்மையடையச் செய்கிறது. ஏழ்மையைத் துடைக்கின்றது. எத்தனையோ வகையான பிரச்சினைகளில் இருந்து சமூகத்திற்கான நலனைத்தரக் கூடியதாக இருக்கிறது. அது இறைக்க இறைக்க ஊற்றெடுக்கும் விடயமாக இருக்கிறது. இன்று எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியின் சவாலைத் துடைப்பதற்கான ஒரு அங்கமாகவும் அதற்கு வலுசேர்க்கக் கூடியதாகவும் இருக்கிறது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் வீணற்ற செலவுகளைத் தவிர்த்து தம்மிடம் உள்ள பொருளாதாரத்தை பக்குவத்தோடு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் எவ்வளவு முக்கியமோ அதே அளவு மற்றவர்களும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் துன்புற்று கஷ்டங்களை எதிர்நோக்காமல் இருக்க கொடுத்து உதவி செய்வதிலும் அதிக அக்கறை காட்டுதல் முக்கியமாகும்.

எனவே, இந்தப் புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம்களாகிய நாங்கள் வழக்கம்போல ஆடம்பரமான பெருநாள் கொண்டாட்டங்களைச் செய்வதைத் தவிர்த்து நிதானமாகவும் பொறுமையுடனும் கொண்டாடுவது மிக மிக அவசியம். அடுத்தவர் பார்த்து மனம் நொந்து போகாமல் எமது பெருநாளை மிகுந்த சிறப்புடன் கொண்டாடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹல்வத்துறை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கி வைக்கும் நிகழ்வு





பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புளத்சிங்கள ஹல்வத்துறை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கொழும்பு 'கிறீன் செனல்' அமைப்பினரால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், ஹல்வத்துறை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்கு தேர்வாகியுள்ள 12 மாணவர்களுக்கு தலா 5000ரூபா, புலமைப்பரிசில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இந்த ஊக்கத்தொகையானது, அந்த மாணவர்கள் தமது பல்கலைக்கழக பட்டப்படிப்பை நிறைவு செய்யும் காலம் வரைக்கும் மாதாந்தம் அவர்களின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்படவுள்ளது.

ஹல்வத்துறை பாடசாலையின் அதிபர் எம். சந்திர மோகனின் ஒருங்கமைப்பில், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், கிறீன் செனல் அமைப்பின் தலைவர் கரு.பத்மநாதன், தேசிய அமைப்பாளர் திருக்கேஷ் செல்லசாமி, களுத்துறை தமிழருவி மன்றத்தின் தலைவர் பொன். சரவணராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.



கொழும்பிலுள்ள பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாம் அண்மையில் வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் வைபவத்தினை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தார். இந் நிகழ்வில் 15 நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் கலந்து கொண்டனர். இந்தியா, கனடா, பாகிஸ்தான், மலேஷியா, பலஸ்தீன், இந்தோனேஷியா போன்ற நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசீம், முஜிபுர் ரஹ்மான், வை.எம்.எம்.ஏ. தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி, என்.எம்.அமீன், மொஹமட் ரசுல்டீன், ஜம்மியத்துல் உலமா பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (படங்கள் - அஷ்ரப் ஏ சமத்)

# நிலையானதும், ஸ்திரமானதுமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இறைவனை பிரார்த்திப்போம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

(மாளிகைக்காடு நிருபர்)



பாவங்கள், தீயன விலக்கி நல்லமல்களினால் நாம் இறைவனுடன் தொடர்புபட்ட ஆயிரம் மாதங்களை விட சிறந்த மாதமான புனித ரமழானை அடைந்து இன்று நோன்புப்பெருநாளை கொண்டாடும் முஸ்லிம் சகோதரர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதுடன் சகலரும் தேக ஆரோக்கியத்துடனும் மன நிம்மதியுடனும் வாழ இறைவன் துணைபுரிய பிரார்த்திப்பதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள், அரசியல் தளம்பல்கள் காரணமாக பல்வேறு முரண்பாடுகளுடன் இந்த புனிதமிகு காலத்திலும் கஷ்டத்தை அனுபவிக்கும் எமது சகோதரர்களுக்கும் பல்வேறு காரணங் களினாலும் துயருற்றி ருக்கும் அனைவருக்கும் இறைவன் நல்ல சுகத்தையும், பறக்கத்தையும் வழங்கிட எல்லோரும் கையேந்தி பிரார்த்திப்போம்.

இலங்கையில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே இந்த காலகட்டத்தில் ஒற்றுமை புரிந்துணர்வு நிலையாக ஏற்பட வேண்டும். சகலருக்கும் நிம்மதியான சந்தோசமான வாழ்க்கை அமைய இத்திருநாளில் முஸ்லிம்கள் துஆ பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும்.

அல்லாஹ்வை முன்னிறுத்தி பல தியாகங்களைச் செய்து 30 நாட்கள் நோன்பிருந்து இன்று பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது இனிய பெருநாள் வாழ்த்துகள்.

நாடு வளர்ச்சியடைய வேண்டுமாயின் நிலையான சமாதானம் இருக்க வேண்டும். அதில் இன ஒற்றுமை என்பது விசேட அம்சமாகும். இஸ்லாம் சமாதானத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்துகின்றது. அதற்கான நாளாக இன்றைய தினத்தை அமைத்துக் கொள்வோம் என்பதுடன், உலகை அச்சுறுத்தும் சகல தீங்குகளிலிருந்தும் எம்மை காக்க சகலரும் துஆ செய்வோம்.

நிலையானதும், ஸ்திரமானதுமான பொருளாதாரத்தை இலங்கை தேசம் அடைந்து முன்னேற்ற பாதைக்கு எமது நாட்டை கொண்டுசெல்ல இறைவனிடம் நாம் கையேந்தி பிராத்திப்போம் - என்று தெரிவித்துள்ளார்.

# ரமழான் கற்றுத்தந்த பாடங்களை கடைப்பிடிக்க எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக!

## முன்னாள் மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்

(நூருள் ஹுதா உமர்)



புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கைவாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது பெருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈத் முபாரக் - என கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மிராசாஹிப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ரமழான் மாதம் முழுவதும் பசித்திருந்து, விழித்திருந்து, நல்லமல்கள் பல புரிந்து இன்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இந்த மகிழ்ச்சிகரமான நன்நாளில் ரமழான் கற்றுத்தந்த பாடங்களை நமது வாழ்நாளில் தொடர்ந்து கடைப்பிடித்து நடப்பதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக.

பிறமனிதர்களின் பசியை, பட்டினியை, துயரைப் புரிந்துகொள்கின்ற வாய்ப்பை வழங்கும் ஒரு மாபெரும் ஔடதமாக நோன்பு விளங்குகின்றது. நோன்பு நோற்பதன் மூலமாக இனிய குணம், உளத்தூய்மை ஏழைகளின் துயரை உணரும் தன்மை, மனிதநேயம் போன்ற பல்வேறு நற்பன்புகளை ஒரு மனிதன் அடைந்து கொள்கின்றான்.

மேலும் எமது நாடு இன்று பாரியதொரு பொருளாதாரப் பின்னடைவை எதிர் கொண்டுள்ளது இதன்காரணமாக நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து செல்வதனால் மக்கள் சொல்லொணா துயரத்தை எதிர்கொண்டு வருகின்றனர். ஆகவே, இந்த நிலைமை மிக விரைவில் நீங்க இந்நன்நாளில் இறைவனிடம் இருகரமேந்தி பிரார்த்திப்போமாக.

முஸ்லிம்களாகிய நாம் பிற மத சகோதர இன மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதோடு, நாடு எதிர்பார்க்கின்ற நிம்மதி, சமாதானம், நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதற்கு முஸ்லிம்களாகிய நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட இத்திருநாளில் திடசங்கற்பம் பூணுவோம். ஈத் முபாரக் - என்று தெரிவித்துள்ளார்.

# ஐக்கியம், சகோதரத்துவத்துடன் வாழ திடசங்கற்பம் பூணுவோம்

## கல்முனை முதல்வர் றகீப்

(சாய்ந்தமருது நிருபர்)



வரலாற்றில் என்றுமில்லாதவாறு எமது நாடு எதிர்நோக்கியிருக்கின்ற பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற இப்புனிதத் திருநாளில் பிரார்த்திப்போம் - என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலான காலம், கொவிட்-19 பெருந்தொற்று எனும் அரக்கனின் கோரத்தாண்டவத்தினால் உயிரிழப்புகளுடனும் பல்வேறுபட்ட அவலங்களுடனும் இனவாத நெருக்குவாரங்களுடனும் கடந்து சென்றிருந்தது.

அத்தகைய துன்ப, துயரங்களிலிருந்து நாம் மீண்டெழுவதற்குள் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து, மக்களை பாரிய நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் அவற்றின் விலைகள் வெகுவாக உயர்ந்திருக்கின்றன.

இதனால் நாடு முழுவதும் இன, மத, பிரதேச வேறுபாடின்றி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நாடு இன்று கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதுடன், அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறானதோர் இக்கட்டான சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் ரமழான் நோன்புகளை நோற்று, பெருநாளைக் கொண்டாடுகின்றோம். இவ்வேளையில், எம்மில் பெரும்பாலான மக்கள் பொருளாதார நெருக்கடியால் நிலைகுலைந்து நிற்பதைப் புரிந்துகொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்திற்காக வசதி படைத்த முஸ்லிம் சகோதரர்கள் நேசக்கரம் நீட்ட முன்வர வேண்டும்.

முஸ்லிம்கள், தாம் எதிர்கொள்கின்ற துன்ப, துயரங்களின்போது பொறுமை, சகிப்புத்தன்மையுடன் அவற்றை இறைவனிடம் பாரம்சாட்டி, பிரார்த்திப்பதே இஸ்லாம் காட்டும் வழிமுறையாகும். மேலும், மனிதனைப் புனிதப்படுத்துகின்ற நோன்பு எமக்கு கற்றுத்தந்துள்ள அனைத்து நற்பண்புகளையும் முழு வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பதன் மூலமே நாம் நோற்ற நோன்புகள் அரத்தமுள்ளதாக அமையும். அவ்வாறே நோன்பு நோற்று, ஏழை, எளியவர்களின் பசியையும் கஷ்டங்களையும் உணர்ந்துள்ள நாம், அவ்வாறானவர்களுக்கு உதவ பின்னிற்கக்கூடாது என வேண்டுகிறேன்.

மேலும், பல்லின சமூகங்கள் வாழ்கின்ற இந்நாட்டில் முஸ்லிம்கள் பிற சமூகத்தினருக்கு முன்மாதிரியாகவும் ஐக்கியம், சகோதரத்துவத்துடனும் வாழ திடசங்கற்பம் பூணுவோம். அவ்வாறே உலகளாவிய முஸ்லிம் உம்மத் எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகளிலிருந்து மீண்டு அமைதி, சமாதானம், நிம்மதி ஏற்பட பிரார்த்திப்போம். அனைவரது வாழ்விலும் சுபீட்சம் மலரட்டும். அனைத்து முஸ்லிம்களுக்கும் இனிய பெருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஈத்முபாரக்.

# நாட்டை மீள கட்டமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது

## ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி

(நூருல் ஹுதா உமர்)



பொருளாதாரம் கடுமையாக சீரழிந்து, நாட்டின் ஸ்திரத்தன்மை கடுமையாக தடுமாறிக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் இலங்கைவாழ் முஸ்லிம்கள் நாட்டின் மேம்பாட்டுக்காக புனிதமிகு இந்த பெருநாள் தினத்தில் பிரார்த்திக்க வேண்டும். தாய் தேசத்தின் மீட்சியிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது - என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்பப் பேரவையின் தவிசாளருமான கலாநிதி அன்வர் முஸ்தபா விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளளதாவது,

நாட்டின் மூலைமுடுக்குகள் முதல் தலைநகரம் வரை தனது அன்றாட வாழ்க்கையை சமாளிக்க முடியாமல் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் சமூக ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான பரஸ்பரம் துளிர்விட ஆரம்பித்துள்ளது. இந்த காலநேரத்தை சரியாக பயன்படுத்தி நாட்டை ஒழுங்கான பொருளாதாரக் கொள்கையுடன் முன்னோக்கி கொண்டுசெல்லவேண்டிய தேவை எமக்கிருக்கிறது. அரசியல் கட்சிகளின் அரசியல் பழிவாங்கல்கள், புராதன அரசியல் முன்னெடுப்புகளினால் சரிந்துள்ள இலங்கை, மீள கட்டமைக்கவேண்டிய நேரத்தை அடைந்துள்ளது.

தாய்நாட்டின் சுபீட்சம் சிறந்தமுறையில் அமைய முஸ்லிம்கள் இந்த பெருநாள் தினத்தில் பிரார்த்திக்க வேண்டும். இன்று எமது நாட்டிலும், உலகம்பூராகவும் புனித நோன்புப்பெருநாளை கொண்டாடும் சகலருக்கும் என்னுடைய ஈத் முபாரக் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் - என்று தெரிவித்துள்ளார்.

# நபிகள் காட்டிய அழகிய வழிமுறையில் இப்பெருநாளை அமைத்துக்கொள்ள வேண்டும்

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர்

(பொத்துவில் நிருபர்)



பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ள எமது நாட்டை மீட்டெடுப்பதற்கும், நாட்டில் அமைதி ஏற்பட்டு சகல இன மக்களும் நிம்மதியாகவும், ஐக்கியமாகவும், வாழ்வதற்குமான சூழலை ஏற்படுத்துவதற்கு சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபையிர் தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புனித ரமழான் மாதத்தில் இறையச்சத்துடன் நோன்பு நோற்று, ஆன்மீக மேம்பாட்டிக்காக வணக்க வழிபாடுகளிலும் ஈடுபட்டு, ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடி மகிழும், அனைத்து இஸ்லாமியச் சகோதரர்களுக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பாக, இன்றும் பல இன்னல்களுக்கு மத்தியில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் இப்பெருநாள் தினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பல்லின சமூகத்தில் வாழும் நாம் எமது பெருநாள் கொண்டாட்டத்தில் சகோதர இன மக்களையும் இணைத்து சகோதர வாஞ்சையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன், நாம் முன்மாதிரியான சமூகம் என்பதை நிரூபித்து, நமது அன்றாட செயற்பாடுகளை உளத்தூய்மையோடும் அல்லாஹ்வின் அருளுக்குரியதாகவும், ஆக்கிக்கொள்ள வேண்டும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் காட்டிய அழகிய வழிமுறையில் இப்பொருநாள் தினத்தை அமைத்துக்கொள்ள வேண்டும் - எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# துன்பங்கள் நீங்கி சுபீட்சமாக வாழ இறைவனை பிரார்த்திப்போம்

## முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் யஹியாகான்

(சாய்ந்தமருது நிருபர்)



நாட்டின் பொருளாதார நெருக்கடி நீங்கி, சகல சமூகங்களும் சுபீட்சமாக வாழ இப்புனித பெருநாள் தினத்தில் பிரார்த்திப் போம் - என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் புனித நோன்பு பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப் பதாவது;

30 நாட்கள் நோன்பு நோற்று அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்றுக்கொண்ட நாம், அதே பாதையில் எமது எதிர்கால வாழ்க்கை முறையையும் நிலைநிறுத்திக்கொள்ள பிரார்த்திப் போம்.

கடந்த நோன்புப் பெருநாள் எம்மை வீட்டோடு அமரச் செய்து விட்டது. கொரோனா கொடூரம் அன்று போல் இன்றும் எம்மை வதைக்கின்ற இக்காலத்தில் முழு உலக மக்களையும் பாதுகாக்கவும் அக்கொடிய நோயிலிருந்து உலகம் மீண்டெழவும் பிரார்த்திப்போம்.

இலங்கை இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. இந்த நெருக்கடி நீங்கி முழு மக்களும் சுபீட்சம் பெறவும் இன்றைய பெருநாள் தொழுகையில் இறைவனிடம் இரு கரம் ஏந்துவோம்.

புனித நோன்புப் பெருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது இனிய பெருநாள் வாழ்த்துகள் உரித்தாகட்டும் - என்று தெரிவித்துள்ளார்.

# இன்பங்கள் பெருகும் நன்நாளாக நோன்புப் பெருநாள் அமையட்டும்

## அப்துல் சத்தார்

(இக்பால் அலி)



இன்று நாட்டில் நிலவும் இக்கட்டானதொரு சூழ்நிலையில் புனித நோன்பை அனுஷ்டித்து, மனதில் இன்பங்கள் பெருக பெருநாளைக் கொண்டாடும் இலங்கைவாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் எனது இனிய பெருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தில் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

புனித நோன்பு மாதம் என்பது அல்லாஹ் விடத்தில் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்ற புனித மாதம். மனதில் எப்பொழுதும் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும் மாதம். தம் பாவக்கறைகளைப் போக்குவதற்காக இறைவனைத் தொழுவதில் அலுப்போ சலிப்போ, வெறுப்போ விரக்தியோ ஏற்படாத மாதம். ஏழைகளின் வறுமையைப் போக்குகின்ற மாதம். உடலிலும் உள்ளத்திலும் தூய்மைப் பேணி அதேநேரத்தில், அந்த தூய்மைத் தன்மையை தொடர்ந்து பேணிப் பாதுக்கின்ற ஒரு மகத்துவ மிக்க மாதம். இப்படி பல சிறப்புகள் மிகுந்த இப்புனித ரமழான் மாதத்தில் நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளின் சவாலை எதிர் கொண்டவர்களாக நாங்கள் இப்பெருநாளைக் கொண்டாடுகின்றோம் என்பது யாவரும் அறிந்த உண்மையே.

எனவே, எதிர்காலத்தில் இப்படியான நெருக்கடியான சிக்கலிலிருந்து விடுபட்டு நாடு சுபீட்சத்துடனும் பொருளாதார அபிவிருத்தியுடனும் முன்னோக்கி நகர்வதற்கான நம்பிக்கையையும் பலத்தையும் எமது புனித நோன்புப் பெருநாள் வழங்க வேண்டும் என்று முஸ்லிம்களாகிய நாம் அனைவரும் அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை புரிய வேண்டும். இது எமது நம்பிக்கையுமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் பொறுமையோடும் நிதானத்தோடும் செயற்பட வேண்டும் என்று கேட்டு என்னுடைய இனி நோன்புப் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

# ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் நாட்டில் தற்போதுள்ள சவாலை வெற்றிகொள்வோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹலீம்

(இக்பால் அலி)



ஏனைய சமூகங்களோடு ஒன்றிணைந்து ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் நாடு எதிர்நோக்கியுள்ள சவாலை வெற்றிகொள்வோம் - என்று முன்னாள் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான சவாலை எதிர்கொண்டு புனித நோன்பு பெருநாளைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இலங்கைவாழ் அனைத்து முஸ்லிம்களுக்கும் புனித நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன் - என்று முன்னாள் முஸ்லிம் சமய விவகார தபால்துறை அமைச்சரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது.

புனித நோன்பு மாதம் என்பது அடுத்தவர்களுடைய பசியை நன்கு அறிந்துகொள்கின்ற மாதமாகும். ரமழான் முழுக்க நோன்பு நோற்று தொழுகையிலும், குர்ஆன் ஓதும் விடயங்களிலும் அதிகம் கண் விழித்து மார்க்க வழிபாடுகளில் ஈடுபட்டு, எமது ஏழை வரியான ஸகாத்தைக் கணக்குப் பார்த்து, பொருளதார நெருக்கடியால் துன்பபட்டுக்கொண்டிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு கொடுத்து உதவி செய்யும் ஒரு சிறப்புமிக்க மாதம்.

இன்று எமது நாட்டில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகப்பெரிய பெருளாதார நெருக்கடியான சவாலுக்கு நாம் முகங்கொடுத்து வருகின்றோம்.

உண்மையிலேயே நாம் புனித நோன்பின் மகத்துவத்தை உணர்ந்து இல்லாதவர்களுக்கு உள்ளவர்கள் ஈரமான இதயத்தோடு நேசக்கரம் கொண்டு அள்ளிக் கொடுத்துவிட்டு அல்லாஹ்விடம் மாபெரும் நன்மைகளை அதிகம் பெற்றவர்களாக இருந்து கொண்டிருக்கின்றோம்.

அதேவேளை, இந்நாடு இருக்கின்ற இக்கெட்டான சூழலில் பொருளாதார நெருக்கடியால் துன்பப்படும் எமது சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கு பாசக்கரம் கொண்டு உதவிசெய்வதைபோன்று எமது அக்கம் பக்கத்திலுள்ள ஏனைய சிங்கள. தமிழ், கிறிஸ்தவ சமூக மக்களும் ஸகாதா என்ற அடிப்படையில் உள்ளவர்கள் தங்களால் இயன்ற உதவிகளையும் ஒத்தாசைகளையும் பங்களிப்புகளையும் வழங்க வேண்டியது மிக அவசியம். இந்த இக்கெட்டான சந்தர்ப்பத்தில் உதவி செய்தவன் என்பதன் மூலம் அல்லாஹ்விடத்தில் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, இந்த இனிய நன்நாளை கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்களாகிய நாங்கள் அனைவரும் ஏனைய சமூகங்களோடு ஒன்றிணைந்து ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் இதனை வெற்றிகொள்ள ஒவ்வொருவரும் உறுதி பூணுதல் வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

# மட்டு. செல்வநகரில் தூக்கில் தொங்கியவாறு 17 வயது சிறுமி ஒருவரின் சடலம் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள செல்வநகர் கிழக்கு பகுதியிலுள்ள பண்ணை வீட்டில் 17 வயது சிறுமி ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (29) இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

செல்வநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய அரநாதன் ரோஜா என்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடியைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர், குறித்த பண்ணையை பராமரிப்பதற்காக அங்குள்ள வீட்டில் குடும்பம் ஒன்றை குடியமர்த்தியுள்ளார். இந்த நிலையில் அங்கு குடியிருந்த குறித்த சிறுமி சம்பவதினத்தன்று மாலை 6 மணியளவில் வீட்டின் மின்விசிறியில் தூக்கிலிட்டு தொங்கி தற்கொலை செய்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுமி காதல் விவகாரம் ஒன்றின் காரணமாக தற்கொலை செய்துகொண்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவைப் பெற்று மரணவிசாரணை அதிகாரியின் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் பகல் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் ஆர்ப்பாட்டம்






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மேதினத்தையிட்டு காந்தி பூங்காவிற்கு முன்னால் இன, மத பேதமின்றி நேற்று (01) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் குணரட்ணம் கிரிதரன் அழைப்பு விடுத்ததையடுத்து, மட்டு. காந்தி பூங்காவிற்கு முன்னால் கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் காலை 10 மணிக்கு ஒன்றிணைந்தனர்.

இதனையடுத்து, கோட்டா வீட்டில் நாங்கள் ரோட்டில், விவசாயத்தை விற்றுவிட்டு மன்னிப்பு கேட்பது சரியா, தொழிலாளர் உரிமை மதிக்கப்பட வேண்டும், நாட்டை விற்ற ராஜபக்ஷ குடும்பமே வெளியேறு, எங்களை சந்தோஷமாக வாழவிடு, அழிக்காதே அழிக்காதே விவசாயத்தை அழிக்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு நகர் பஸார் வீதியில் ஊர்வலமாக மாட்டுவண்டியில் மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்தை வந்தடைந்து, காந்தி பூங்காவிற்கு முன்னால் அரசு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு பின் அங்கிருந்து கலைந்துசென்றனர்.

# 'தியாகத்தீபம்' சிறுகதை தொகுப்பு வெளியீடு



(திருகோணமலை நிருபர்)

விபுலானந்தர் இணையக் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் மயில் மகாலிங்கம் எழுதிய 'தியாகத்தீபம்' எனும் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா திருகோணமலை தி.தி.இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நேற்று முன்தினம் (30) மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி சதாசிவம் பவானந்தமும் கௌரவ விருந்தினராக முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மற்றும் மூதூர் கலாசார உத்தியோகத்தர் க.அன்பழகனும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வு விபுலானந்தா கல்லூரியின் அதிபர் றெமன்சோதி ஜெறோம் தலைமையில் ஆரம்பமாகியது. நூலாசிரியரின் சகோதரர் ம.உதயகுமார் நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை நல்லதம்பி துரைராஜா ரகுராம் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து மூத்த இலக்கியவாதிகளான வேலாயுதம் தங்கராசா (தம்பலகாமம்), அம்பலவாணர் கௌரிதாசன் (தாமரைதாசன்), பேரம்பலம் கனகரெத்தினம் (ஷெல்லிதாசன்), சோமநாதர் இராசேந்திரம் (தாமரைத்தீவான்), சின்னத்துரை சுந்தரலிங்கம் (திருமலை சுந்தா) ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக, இருதய சத்திரசிகிச்சை நோயாளர்களுக்கு அல்-அமானா நற்பணி மன்றத்தினர் நிதியுதவி

(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது அல்-அமானா நற்பணி மன்றத்தினால் சிறுநீரக சத்திரசிகிச்சை, இருதய சத்திரசிகிச்சை செய்ய பணத்தேவை உடையவர்களுக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்வும் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும், இப்தார் நிகழ்வும் அமானா நற்பணி மன்றத் தலைவர் ஏ.எல்.பரீட் தலைமையில் அல்-அமானா நற்பணி மன்ற சாய்ந்தமருது காரியாலயத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.




சிறுநீரக சத்திரசிகிச்சை, இருதய சத்திரசிகிச்சை செய்ய பணத்தேவை உடையவர்கள், பெருநாளை கொண்டாட வசதியற்றோர் மற்றும் அங்கவீனர்கள், அநாதைகள், விதவைகள், வாழ்வாதாரம் இழந்தோர் எனப் பலருக்கும் பண உதவிகளை அல்-அமானா நற்பணி மன்றத்தினர் வழங்கினர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பிராந்திய சமூக சேவை அமைப்புகளின் பிரமுகர்கள், சாய்ந்தமருது அல்-அமானா நற்பணி மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இப்தார் விசேட மார்க்க உரையை சாய்ந்தமருது ஜும்மா பெரிய பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எம்.ஐ.எம். ஆதம்பாவா (ரஷாதி) நிகழ்த்தினார்.

# கல்முனை கிரீன் பீல்ட் மக்களுக்கு இந்தியத் தூதுவரின் உதவியுடன் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் பெண்கள் தலைமைதாங்கும் 100 குடும்பங்களுக்கு கிரீன் பீல்ட் முஹைதீன் மஸ்ஜித் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கல்முனை மாநகர சபை பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் கிரீன் பீல்ட் கமு/ கமு/ரோயல் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கான இரண்டாவது இந்திய உயர்ஸ்தானிகரான வீ.அஷோக்குமார் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில், இலங்கை இந்திய நட்புறவானது இன்று நேற்றானதல்ல. பல தசாப்தங்களாக நீடித்துக்கொண்டிருக்கக்கூடியதென்றும், எதிர்காலங்களிலும் தம்மால் முடியுமான உதவிகளை இந்தியா சார்பில் இலங்கைக்கு செய்வோம் எனவும் கூறி கல்முனை கிரீன் பீல்ட்டில் வசிக்கும் விதவைப் பயனாளர்கள் சம்பந்தமான விடயங்கள் பற்றி பரிந்துரைத்த ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்புக்கும் அதன் ஸ்தாபகத் தலைவர் ரஹ்மத் மன்சூருக்கும் இந்நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்த வை.எம்.எம்.ஏ. பேரவைக்கும் தனது விசேட நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் உரையாற்றுகையில், இதுபோன்ற மனிதநேயப் பணிகளைச் செய்வதற்கான தனது கோரிக்கையை ஏற்று அதனை நிறைவேற்றித் தந்த இலங்கைக்கான இரண்டாவது இந்திய உயர்ஸ்தானிகரான வீ.அஷோக்குமாருக்கும், இந்நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்து நெறிப்படுத்திய வை.எம்.எம்.ஏ. பேரவைக்கும், இந்நிகழ்வை நிகழ்த்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கிரீன் பீல்ட் ரோயல் பாடசாலை அதிபர் ஏ.எல்.அன்சார், கிரீன் பீல்ட் கூட்டு ஆதன முகாமைத்துவ காரியாலயத்தின் தலைவர் எம்.ஏ.கலீலுர் ரஹ்மான், ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் நிர்வாக அங்கத்தவர்கள் அனைவருக்கும், முஹைதீன் மஸ்ஜித் பள்ளி நிர்வாகத்தினர்களான தலைவர் ஏ.எல்.நபீர், செயலாளர் எம்.எச்.அப்துல் கரீம், பொருளாளர் ஏ.எம்.றியாஸ் உட்பட ஏனைய பள்ளி நிர்வாக உறுப்பினர்களுக்கும், மேலும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து பிரமுகர்களுக்கும் மற்றும் பயனாளர்களாக வந்து கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

# பஸ்ஸுடன் மோதி முச்சக்கரவண்டி விபத்து

## மன்னம்பிட்டியில் மூவர் உயிரிழப்பு





பொலநறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியில் மன்னம்பிட்டி பாலத்திற்கு அருகில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்று பேரே உயிரிழந்துள்ளதாக மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரலகங்வில அருணபுர பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதான யு.டப்ளியூ.ஜீ.ரன்பண்டா, 62 வயதான அவரது மனைவி ஜீ.கே.நந்தாவதி மற்றும் இவர்களின் உறவினரான டி.ஜீ.விமலா ரந்தெனிய என்ற 72 வயதான பெண்மணி ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அருணபுர பிரதேசத்தில் இருந்து மாத்தளையிலுள்ள உறவினர்களின் வீட்டுக்குச் செல்லும் வழியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இவர்கள் சென்ற முச்சக்கரவண்டியுடன் மோதிய தனியார் பஸ் பொலநறுவை திசையிலிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஊழியர்களை ஏற்றிச்சென்றுள்ளது.

முச்சக்கரவண்டி மற்றுமொரு பஸ்ஸை முந்திச்செல்ல முற்பட்டபோது, எதிரில் வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளதாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து சம்பவத்தையடுத்து பஸ்ஸின் சாரதியை கைதுசெய்துள்ளதாக மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மார்பு சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு




(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகரித்துவரும் காசநோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலுக்கமைய பிராந்திய மார்பு சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச்.திலிப் மபாஸ் இதற்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளார். இதற்கமைய சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மார்பு சிகிச்சை நிலையத்தின் பிரிவு ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு நீண்டகால சுவாச நோய்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஒவ்வொரு மாதமும் 3ஆவது வாரத்தில் விசேட சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பிரதேச சபையின் 49ஆவது அமர்வில் கறுப்புப்பட்டி அணிந்து கலந்துகொண்ட உறுப்பினர்கள்

(அம்பாறை நிருபர்)

அரசாங்கத்தின் செயற்பாடுகள், மின்சாரத் தடை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகவும் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து சபை அமர்வில் கலந்துகொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேச 4ஆவது சபையின் 49ஆவது கூட்ட அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை (29) மாலை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர் தலைமையில் பிரதேச சபையின் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சபை அமர்வின் ஆரம்பத்தில் மத அனுஷ்டானம் 2022 மார்ச் மாதத்திற்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல், 2022 மார்ச் மாதத்திற்கான கணக்கறிக்கையை உறுதிப்படுத்தல், தவிசாளர் உரை என்பன இடம்பெற்றன.




அதன்பின்னர் அரசாங்கத்தின் செயற்பாடுகள், மின்சாரத் தடை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி 6 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 6 உறுப்பினர்களும் இணைந்து கறுப்புப்பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளருமான வை.எல்.சுலைமாலெப்பை மாத்திரம் கருப்புப்பட்டி அணியாது அரசாங்கத்தின் செயற்பாடுகள், அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் போன்ற மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் கருத்துகளை அவதானிப்பதாகவும் தற்போதைய நாட்டின் நிலைமை குறித்து ஏனைய சக உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுடன் உடன்படுவதாகவும் இதற்காக உடனடி தீர்வுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் எடுக்க முயற்சிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து சபை அமர்வில் கடிதங்கள், பிற விடயங்கள் ஆராயப்பட்டு சபை நடவடிக்கைகள் யாவும் நிறைவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. விபுலானந்தா கற்கை நிறுவகத்தில் விரிவுரையாளர்களை வெளியேறவிடாது கதவை மூடி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தில் இரு மாணவர்கள் மீது விரிவுரையாளர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை (29) இரவு தாக்குதல் நடத்தியதை கண்டித்து நீதிகோரி நிறுவகத்தின் பணிப்பாளர் உட்பட அங்கு கற்பிக்கும் விரிவுரையாளர்களை வெளியே செல்லவிடாது பல்கலைக்கழக கதவை மூடி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்லடியில் அமைந்துள்ள குறித்த நிறுவகத்தில் கல்விகற்றுவரும் இரண்டாம் வருட 2 மாணவர்களும் ஒரு முதலாம் ஆண்டு மாணவர் உட்பட 3 மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் எந்தவிதமான விசாரணையும் இன்றி அவர்களை கல்விகற்க விடாது இடை நிறுத்தப்பட்டனர். அதனையடுத்து அவர்கள் செய்த குற்றத்தை மன்னித்து நாட்டின் சூழலை கருத்தில் கொண்டு அவர்கள் மீது கல்வி கற்க தடைசெய்யப்பட்டதை நீக்கக்கோரி மாணவர்சங்க மாணவர்கள் நிர்வாகத்திடம் கோரிக்கையை சம்பவதினம் முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு இது தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என நிர்வாகம் அறிவித்த நிலையில், மாலை 6.30 மணியளவில் அதற்கான தீர்வினை நிர்வாகம் வழங்காத நிலையில், விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து வெளியேறியபோது, மாணவர்கள் எங்களது கோரிக்கைக்கு தீர்வு வழங்கிவிட்டு செல்லுமாறு கோரி அவர்களை செல்லவிடாது தடுத்தனர்.

இதன்போது மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்ட நிலையில், விரிவுரையாளர் ஒருவர் இரு மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து அவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மாணவர்கள் உடனடியாக பல்கலைக்கழக வாயில் கதவுகளை மூடி தாக்கப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் நீதி கோரி பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து பல்கலைக்கழக பணிப்பாளர், விரிவுரையாளர்கள் உட்பட 10க்கும் மேற்பட்டவர்களை அங்கிருந்து வெளியேற விடாது வாசல் கதவுகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து, பொலிஸார் வரவழைக்கப்பட்டு அங்கு பலத்த பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொண்ட நிலையில் பொலிஸார் பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முற்பட்டபோது அவர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் மாணவர்கள், "குறித்த விரிவுரையாளர் வேண்டாம் தாக்குதலுக்குள்ளான மாணவர்களுக்கு நீதி வேண்டும், இடைநிறுத்தப்பட்ட மாணவர்களுக்கு நீதி வேண்டும், கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் இங்கு வரவேண்டும்" எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து, பல்கலைக்கழக விரிவுரையாளர் குழு ஒன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பின்னர் நிறுவகப் பணிப்பாளர் மற்றும் நிர்வாகப் பிரிவுடன் மாணவர் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதன்போது மாணவர்கள் ஒரு உடன்பாட்டிற்கு வந்ததையடுத்து, இரவு 12 மணிக்கு ஆர்ப்பாட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட விரிவுரையாளர்கள் வெளியேறி சென்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## எரிவாயு சிலிண்டரில் மோசடி; சந்தேகநபர் விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எரிவாயு சிலிண்டரில் மோசடி செய்த சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் கடந்த வெள்ளிக்கிழமை (29) உத்தரவிட்டார்.

சாம்பல் தீவு, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அப்பகுதியில் உள்ள பெண்ணொருவரிடம் எரிவாயு சிலிண்டரை பெற்று மாற்றித் தருவதாக கூறி, எரிவாயு சிலிண்டரை விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் கைதுசெய்து திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# நாடு முழுவதும் அரசாங்கத்துக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தாலும் வடக்கு கிழக்கை அடக்குவதில் அரசாங்கம் குறியாக இருக்கிறது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(மட்டக்களப்பு, கல்லடி நிருபர்கள்)

நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்திருக்கின்ற நிலையில்கூட, எமது வட- கிழக்குத் தாயகத்திலே எந்தவிதச் சத்தங்களும் கேட்கக் கூடாது என்ற வகையிலே அரசாங்கம் செயற்படுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஆய்வாளருமான தராகி சிவராமின் 17ஆவது நினைவு தினமும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரும் கவனயீர்ப்புப் போராட்டமும் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் தராகி சிவராமை நினைவு கூரவே நாம் இன்று இவ்விடத்தில் ஒன்று கூடியுள்ளோம். இன்று வரைக்கும் இப்படுகொலை தொடர்பிலான நீதி கிடைக்கவில்லை. இவர் கொழும்பிலே கடத்தப்பட்டு உயர் பாதுகாப்பு வலயமான நாடாளுமன்றத்துக்குப் பின்னால் சடலமாக மீட்கப்பட்டார். இவ்வாறு யாரும் கேள்வி கேட்க முடியாத கொடூரமான நிகழ்வுகள் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

இத்தகையோர் வரிசையில் அண்ணன் சிவராம் மிக முக்கியமானவராவார். இவர் தமிழ்த் தேசியம் தொடர்பாக பல முக்கிய கட்டுரைகளை ஆங்கில மொழியிலும் எழுதி எமது பிரச்சினைகளை சர்வதேசம் வரை கொண்டு சென்றார்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் தென்பகுதியில் நிகழ்ந்து கொண்டிருக்கையில், வட- கிழக்கு பிரதேசங்களிலேயே இவ்வாறான போராட்டங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்நிலையில் எமது நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியனை அரசாங்கத்துக்கு எதிராக எதுவித போராட்டங்களையும் நடத்தக் கூடாது என களுவாஞ்சிகுடி பொலிஸாரினால் நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரினால் நீதிமன்ற உத்தரவு கையளிக்கப்பட்ட சமயம், நாடு முழுவதும் முடக்கப்பட்டிருந்தது.

இவ்வேளையில் பிரதான எதிர்க்கட்சி கண்டியிலிருந்து கொழும்பு வரையிலான பாரிய ஆர்ப்பாட்டத்தினை வீதியை மறித்து மேற்கொண்டிருந்தார்கள். இந்நிலையில் அங்கே ஒரு சட்டம்? இங்கே ஒரு சட்டமா?- என்று கேட்க வேண்டியுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரட்ணம், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகர் சிவராமின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

# நீதி இல்லாத நாட்டில் நிதியும் இல்லை

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி.

(மட்டக்களப்பு நிருபர்)

அண்ணனின் ஆட்சியிலும் நீதி இல்லை, தம்பியின் ஆட்சியிலும் நீதியை எதிர்பார்க்க முடியாது. நீதி இல்லாத நாட்டில் தற்போது நிதியும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராம் நினைவுத் தூபியில் கடந்த வெள்ளிக்கிழமை (29) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீதி இல்லாத நாட்டில் தற்போது நிதி கூட இல்லாமல் இருக்கின்றது. நீதியும் இல்லை, நிதியும் இல்லை. ஆனால், இல்லாத நீதிக்கும், நிதிக்கும் ஒரு அமைச்சர் மட்டும் இருக்கின்றார்.

அந்த அமைச்சர் இன்னும் ஒரு மாதத்திலே இந்த நாட்டிலே நிலவியுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு வரும் என கட்சித் தலைவர்களின் கூட்டத்திலே உறுதியளித்துள்ளார். எந்தவொரு சிறுபிள்ளையும் இவரின் இந்தக் கருத்தை நம்பாது.

இதேபோன்று தான் இந்த அரசு நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றிக் கொண்டு வருகின்றது. பொருளாதார ரீதியில் மாத்திரமல்லாமல், ஆயுதப் போராட்ட முடிவில் சர்வதேசத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விட்ட காரணத்தினால் இந்த ராஜபக்ஷ சகோதரர்கள் அரசை உலகத்தில் எவருமே நம்ப முடியாது நிலை ஏற்பட்டுள்ளது.

உலகத்திலே மிகவும் பிரபல்யமாக வந்த அரச தலைவராகவும், மிகவும் கீழ்த்தரமாக



விமர்சிக்கப்படும் தலைவராகவும் கோட்டாபய ராஜபக்ஷ திகழ்கின்றார். இவர் ஒரு போர்க்குற்றவாளி. இவரை தமிழ் மக்கள் 2019ஆம் ஆண்டே வேண்டாமென்று நிராகரித்திருந்தார்கள். இன்று அவரை வேண்டுமென்று கொண்டு வந்தவர்களே வேண்டாம் என்று கூறுகின்றார்கள்.

எனவே இவர் உள்ளிட்டவர்கள் பதவி விலக வேண்டும். இந்த நாடு ஒரு முன்னேற்ற நிலைக்குச் செல்ல வேண்டும். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும் என்பதே எங்களது உறுதியான நிலைப்பாடாகும்" என்று தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் பலி; ஒருவர் படுகாயம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனங்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியானதுடன், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (29) இரவு வேளையில் பனங்காடு பாலத்தின் அருகே இடம்பெற்ற விபத்தின்போதே இத்துயரச் சம்பவம் பதிவாகியுள்ளது.

விபத்தில் விநாயகபுரத்தை சேர்ந்த இருவர் பலியானதுடன், பனங்காடு பிரதேசத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் வீதியின் அருகே இருந்த தூண் ஒன்றில் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக



தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான விசாரணையை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாவற்சோலை பஞ்சகர்ம ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஆளுநர் விஜயம்!





(பைஷல் இஸ்மாயில், மட்டு துஷாரா)

திருகோணமலை - நாவற்சோலை பஞ்சகர்ம ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் விஜயமொன்றினை மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது நாவற்சோலை வைத்தியசாலையை பார்வையிட்டதுடன் அங்குள்ள நிலைமைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சாமஸ்ரீ தேசகீர்த்தி திருமதி இ.ஸ்ரீதரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது குறித்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும், சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்திய அதிகாரியுமான வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# வியாழேந்திரனின் பெயருக்கும் பதவிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை





(மட்டக்களப்பு நிருபர்)

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக கடந்த 25ஆம் திகதி பிள்ளையாரடி பிரதான வீதி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது இராஜாங்க அமைச்சரின் பெயருக்கும், அவரது அமைச்சுப் பதவிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் வார்த்தை பிரயோகங்களை உபயோகித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன், அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் அமைச்சரை தொடர்புபடுத்தி உண்மைக்கு புறம்பான செய்திகளை கூறி, அமைச்சர் வகித்துவரும் அமைச்சுப் பதவிகுறித்து பதாகைகள் மூலம் காட்சிப்படுத்தி, ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை மட்டுமல்லாது இராஜாங்க அமைச்சரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையினால் தனக்கு உளரீதியான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதுமட்டுமல்லாது நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இடம்பெறும்போது உண்மைக்குப் புறம்பான விடயங்களை இவர்கள் திரிவுபடுத்தி வெளியிட்டு வருவதனால் இவர்களுக்கு எதிரான சகல ஆதாரங்களையும் வழக்கு தொடர்வதற்காக எழுத்து மூல ஆவணங்களாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் சம்மந்தப்பட்ட ஒவ்வொருவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் இதன்போது தெரிவித்திருந்தார்.

# ஊடகர் சிவராமின் நினைவேந்தல் நிகழ்வில் மறைந்திருந்து வீடியோ எடுத்த பொலிஸார்

## பொலிஸாருக்கு விலையுயர்ந்த கெமராக்களை வழங்க ஜனாதிபதிக்கு பணம் எங்கிருந்து வந்ததென கேள்வியெழுப்புகிறார் சாணக்கியன்

(மட்டக்களப்பு நிருபர்)

ஊடகவியலாளர் சிவராமின் நினைவு நிகழ்வில் ஊடகவியலாளர்களின் நடுவில் மறைந்திருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வீடியோ எடுக்கின்றார். நாங்கள் இன்று படுகொலைசெய்யப்பட்ட சிவராமுக்கு என்ன நடந்தது, அவரை யார் கொன்றார்கள், அவருக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்கின்ற நிலையில், அவ்வாறு கோரும் ஊடகவியலாளர்களை பொலிஸார் வீடியோ



எடுக்கின்றனர். முன்னர் பொலிஸார் வந்து சிறு சிறு கையடக்கத் தொலைபேசிகளில் வீடியோ எடுப்பார்கள். தற்போது விலைகூடிய கெமராக்களை வைத்திருக்கின்றார்கள். மக்களுக்கு உண்ண, குடிக்க நாட்டில் பணம் இல்லாத நிலையில், பொலிஸாருக்கு பெறுமதியான கெமராக்களை வாங்கிக் கொடுப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எங்கிருந்து பணம் வருகின்றதோ தெரியவில்லை - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் நாங்கள் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமை நினைவுகூர்ந்துகொண்டிருக்கின்றோம். அவர் கொல்லப்பட்டு 17 வருடங்களின் பின்னராவது காலி முகத்திடலில் இடம்பெறும் போராட்டத்தில் அவரது கொலைக்கும், படுகொலைசெய்யப்பட்ட ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் நீதிகோரி பதாகைகள் வைக்கப்பட்டன. ஆனால், பொலிஸாரினால் அண்மையில் அவை அகற்றப்பட்டிருந்தன.

கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் போதும், நினைவேந்தல்கள் செய்யும்போதும் பொலிஸார் வந்து வீடியோ எடுப்பதை நாங்கள் ஒருபோதும் பார்த்ததில்லை. பொலிஸார் என்று கூறி அறியாதவர்கள் கூட வந்து போட்டோ எடுப்பதைக் காணவில்லை. ஆனால், இன்று மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் நினைவு நிகழ்வில் ஊடகவியலாளர்களின் நடுவில் மறைந்திருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வீடியோ எடுக்கின்றார்.

நாங்கள் இன்று படுகொலைசெய்யப்பட்ட சிவராமுக்கு என்ன நடந்தது? அவரை யார் கொன்றார்கள்? அவருக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்கின்ற நிலையில், அவ்வாறு கோரும் ஊடகவியலாளர்களை பொலிஸார் வீடியோ எடுக்கின்றனர்.

முன்னர் பொலிஸார் வந்து சிறு சிறு கையடக்கத் தொலைபேசிகளில் வீடியோ எடுப்பார்கள். தற்போது விலைகூடிய கெமராக்களை வைத்திருக்கின்றார்கள். மக்களுக்கு உண்ண, குடிக்க நாட்டில் பணம் இல்லாத நிலையில் பொலிஸாருக்கு பெறுமதியான கெமராக்களை வாங்கிக் கொடுப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எங்கிருந்து பணம் வருகின்றதோ தெரியவில்லை.

இலங்கையில் ஒரே நாடு ஒரே சட்டம் இல்லை. ஒரு நாட்டு நூறு சட்டங்கள். அதிலும் கிழக்கு, வடக்கைப் பொறுத்தமட்டில் ஒரு நாடு ஓராயிரம் சட்டங்கள். நாட்டில் தற்போது அனைத்து இடங்களிலும் அனைவரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்ற நிலையில், ஆர்ப்பாட்டம் செய்தால் கைதுசெய்யும் முகமாக நீதிமன்றக் கட்டளையொன்று எனக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை நாங்கள் நீதிமன்றத்தின் ஊடாகப் பார்த்துக்கொள்வோம். ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்ட அலையை இவ்வாறான சிறு சிறு விளையாட்டுகளைக் காட்டி கோட்டபாயவினால் நிறுத்த முடியாது.

எனவே, நான் மக்களிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன். மட்டக்களப்பில் மாத்திரமல்ல நாடுபூராகவும் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் சார்பாக மக்கள் அனைவரும் முன்நிற்கவேண்டும். சிவராமின் 18ஆவது நினைவு நிகழ்வுக்கு முன்னராவது அவரது படுகொலைக்கான நீதி கிடைக்க அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுக்கவேண்டும் - என்று தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



**மஹிந்த ராஷபக்ஷ உடனே பதவி விலகச் சொல்லி காவி உடை பௌத்த மகாசங்கம் தீர்மானம் எடுத்தவங்க எலுவா?**

**பேசாம பிரதமராக அவங்களில ஒருத்தர நியமிச்சா நல்லம். இலங்கையில அகராதில புத்தபிக்குமாராலதான் இந்த பஞ்சமும் ஒரு காராணம் .. 1948, தொடக்கம் இப்ப மட்டும் தமிழ்மக்களுக்கு சுதந்திரம் கொடுக்க உடாம சிங்கள தலைவர தூண்டி உட்டு தடுத்து வேடிக்க பார்த்த ஆசாமிமாரும் இவங்கதானே!**

## உஹன பிரதான வீதியில் விபத்து: ஒருவர் படுகாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள உஹன பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உஹன பகுதியிலிருந்து சென்ற லொறியும், நுகேலந்த பகுதியிலிருந்து சென்ற மோட்டார் சைக்கிளும் மோதியதனாலேய இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு வாகனங்களும் அருகிலிருந்த வயற்பகுதியில் வீழ்ந்துள்ளதுடன், இதில் மோட்டார்



சைக்கிளில் சென்றவர் காயமடைந்து செனரத்புர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல் வழங்கல்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் 5ஆம் வகுப்பு மாணவர்களது புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்தும் நோக்கோடு தென்னன்மரவடி, திரியாய், கல்லம்பத்தை, குச்சவெளி, இரணைக்கேணி, நாவற்சோலை, கும்புறுபிட்டி ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் 5ஆம் வகுப்பு மாணவருக்கு 'ஞானோதயம்' என்ற புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூலை 2022.04.27 அன்று அன்பளிப்பாக வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர்ச.குகதாசன் மேற்படி நூல்களை மாணவருக்கு வழங்கினார்.

இதுபோன்று வெருகல் கோட்டத்திலுள்ள 16 பாடசாலைகளில் கல்வி பயிலும் 5ஆம் வகுப்பு மாணவரது புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்தும் நோக்கோடு "ஞானோதயம்" என்ற புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூலை 2022.02.15 அன்று திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் அன்பளிப்பாக வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான அனுசரணையை சுவிஸில் வாழும் திக்கம் ஊரைச் சேர்ந்த கனகசபை யோகானந்தன் வழங்கியிருந்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பில் தராகி சிவராமின் 17ஆவது நினைவேந்தலும் நீதிகோரி ஆர்ப்பாட்டமும்







(மட்டக்களப்பு நிருபர்கள்)

படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் 17ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை (29) காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் நினைவேந்தலும் படுகொலைசெய்யப்பட ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டி ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சிவராமின் 17ஆவது நினைவேந்தல் இடம்பெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரன், மாநகர முதல்வர் ரி.சரவணபவன், பிரதி முதல்வர் சத்தியசீலன், முன்னாள் மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மற்றும் ஊடகவியலாளர்கள், மதகுருமார்கள் கலந்துகொண்டு சிவராமின் திருவுருவப்படத்திற்கு மலர்த் தூவி, சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்கு நீதிவேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களையும் கொலை செய்யவா முயற்சிக்கின்றீர்களென சிவில் உடையில் ஊடகவியலாளர்களை காணொளி எடுத்த பொலிஸாரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மிகவும் காட்டமான முறையில் கேள்வி எழுப்பி அவர்களை அங்கிருந்து துரத்தி அனுப்பினார்.

## மோட்டார்சைக்கிள் விபத்தில் யாசகர் பலி; இருவர் படுகாயம்!

(மீராவோடை நிருபர்)

மோட்டார்சைக்கிள் விபத்தில் யாசகர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை பிரதான வீதியில் நேற்று முன்தினம் (29) அதிகாலை 2 மணியளவில் நடைபெற்ற விபத்திலேயே யாசகர் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நடக்கமுடியாத நிலையில் வாழ்ந்துவந்த குறித்த யாசகர் வீதியோரம் உறங்கிக் கொண்டிருந்தபோது மோட்டார்சைக்கிள் ஒன்றில் பயணித்த மூன்று இளைஞர்கள் யாசகர் மீது மோதியுள்ளனர். மோட்டார்சைக்கிள் யாசகரின் தலைப்பகுதியில் ஏறியதில் யாசகர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில் வந்த ஓர் இளைஞன் தப்பிச்சென்றுள்ளதுடன், இருவர் படுகாய மடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மரணமடைந்த 41 வயதுடைய யாசகரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரதே பரிசோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. மாவட்ட செயலகத்தில் அரச செலவீனத்தை முகாமை செய்தல் தொடர்பான கலந்துரையாடல்





(மட்டக்களப்பு நிருபர்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (29) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பொது நிதியை மிகவும் பொறுப்பாகவும், சிக்கனமான முறையிலும் பயன்படுத்தும் அதேவேளை, பொதுமக்களுக்கு வினைத்திறனான தேவையை முன்னெடுப்பது தொடர்பாக இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரினால் நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கமைவாக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த சவால்மிக்க சூழ்நிலையைக் கட்டுப்படுத்த அரசின் வருமானத்தை அதிகரிப்பது மிக முக்கியமான தேவையாக இருப்பதுடன், அரசாங்க வருமானத்தை அதிகரிக்க எடுக்கும் காலநேரத்தைக் கருத்திற்கொண்டு, பொதுச் செலவீனங்கள் மிகவும் இறுக்கமானதாக இருக்கவேண்டும். இதனை மிகவும் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே செலவு செய்தல் வேண்டும் என்று இதன்போது மேலும் அறிவுறுத்தப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று கிளை தலைவர்களுக்கு இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நவரூபரஞ்ஜினி முகுந்தன், பிரதம கணக்காளர் இந்திராவதி மோகன் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## அக்கரைப்பற்று வைத்தியசாலையில் வருடாந்த இப்தார் நிகழ்வு






(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வருடாந்த இப்தார் நிகழ்வு பொது சத்திரசிகிச்சை நிபுணர் றிப்ஷான் ஜமீல் ஒருங்கிணைப்பில் வைத்தியசாலை கிளினிக் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (28) நடைபெற்றது.

வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம்.ஹனிபா பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், இந்நிகழ்வில் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ.ஜி.எம்.ஷபீ, அரச மருத்துவ சங்கத்தின் வைத்தியசாலைக்கான தலைவர் டாக்டர் சியாத்.எம் இஸ்மாயில், வாய் முகத்தாடை சத்திரசிகிச்சை நிபுணர் விராஜ் ஜயசிங்க, மகப்பேற்று பெண்ணோயியல் வைத்திய நிபுணர் யுரேகா விக்ரமசிங்க, சிறுபிள்ளை நோய் மருத்துவ வைத்திய நிபுணர் எஸ்.எம்.அஷ்ஹார், தர முகாமைத்துவப் பிரிவினது பொறுப்பு வைத்தியர் எம்.எம்.தாஸிம் மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இந்திய செய்திகள்

## இராணுவ தலைமைத் தளபதியாக மனோஜ் பாண்டே பொறுப்பேற்பு



இந்திய இராணுவத்தின் 29ஆவது தலைமைத் தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே பொறுப்பேற்றுள்ளார்.

இராணுவ தலைமைத் தளபதி எம்.எம்.நரவணேயின் பதவிக்காலம் சனிக்கிழமையுடன் (ஏப்ரல் 30) நிறைவடைந்ததையொட்டி, அந்தப் பதவியில் மனோஜ் பாண்டேயை நியமிப்பதாக மத்திய அரசு கடந்த 18ஆம் திகதி அறிவித்தது.

அதைத் தொடர்ந்து, அடுத்த இராணுவ தலைமைத் தளபதியாக மனோஜ் பாண்டே சனிக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார். இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இவர் பொறுப்பு வகித்தாலும், கடற்படை, விமானப் படை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பொறுப்பும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.



முப்படைகளின் தலைமைத் தளபதியாக இருந்த விபின் ராவத் கடந்த டிசம்பரில் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த பிறகு அந்தப் பதவிக்கு இன்னும் யாரும் நியமிக்கப்படவில்லை. இராணுவ தலைமைத் தளபதியாக இருந்த எம்.எம்.நரவணே அந்தப் பதவிக்குரிய பணிகளையும் கூடுதலாகக் கவனித்து வந்தார்.

தேசிய பாதுகாப்பு எகடெமியில் பயிற்சிபெற்ற மனோஜ் பாண்டே, இராணுவத்தின் பொறியியலாளர்கள் படைப் பிரிவில் 1982ஆம் ஆண்டு இணைந்தார். இராணுவத்தின் பொறியியலாளர்கள் படைப் பிரிவிலிருந்து தலைமைத் தளபதியாகப் பதவி வகிக்கவுள்ள முதல் நபர் என்ற சிறப்பை மனோஜ் பாண்டே பெற்றுள்ளார்.

தனது 39 ஆண்டுகால இராணுவ சேவையில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை மனோஜ் பாண்டே வகித்துள்ளார். லடாக் மலை படைப் பிரிவுத் தலைவர், வடகிழக்குப் பகுதி படைப் பிரிவுத் தலைவர், அந்தமான்-நிகோபார் படைப் பிரிவுத் தளபதி, கிழக்குப் படைப் பிரிவுத் தளபதி உள்ளிட்ட பொறுப்புகளை அவர் வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பிரதமர் மோடியைபோல் இலங்கை ஆட்சியாளர்கள் செயற்பட்டதாலேயே அங்கு கடும் பொருளாதார நெருக்கடி

### தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி



இந்திய பிரதமர் மோடியைபோல் இலங்கை ஆட்சியாளர்கள் செயற்பட்டதால்தான் அங்கு கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது - என தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கே.எஸ்.அழகிரி தெரிவிக்கையில்,

2024 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணிதான் வெற்றிபெறும். கடந்த 7 ஆண்டுகளாக பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்துள்ளது. கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவித்து வருகின்றனர். 8 மாநிலங்களில் ஒரு நாளுக்குரிய நிலக்கரிதான் கையிருப்பிலுள்ளது. அந்த மாநிலங்களில் அனல் மின் நிலையங்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருகின்றன.

மாநில அரசுகளே வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்துகொள்ளலாம் என்பது சாத்தியமல்ல. இது மாநில அரசை பலவீனப்படுத்தும் என்பதாலேயே மத்திய அரசு இவ்வாறு செயற்படுகிறது. இந்தியா முழுவதும் கடும் இருளை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. இதை சரிசெய்ய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையிலுள்ள ஆட்சியாளர்கள் இந்தியப் பிரதமர் மோடியைபோல் நடந்துகொண்டதால்தான் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதால் உள்நாட்டில் உற்பத்தி குறைந்துவிட்டது. இலங்கையில் பொருளாதாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்றால் சுயசார்பு நிலை வேண்டும். அதற்கு இந்தியா உதவி செய்யும் - என்றார்.

## சுமையோடு ஒரு வாழ்க்கைப் பயணம்...



வாழ வழியற்றவர்களுக்கு ஊரும் இல்லை. மாநிலமும் இல்லை. இப்படி வாழ்க்கையே சுமையாகிப்போன பலருக்கு சுமைப் பணியே வாழ்வாதாரம் ஆகிவிடுகிறது.... (மே தின பகிர்வு)

# “எங்களை எப்போது அகதிகளாக பதிவு செய்வீர்கள்?”

## அடைக்கலம் கோரி இந்தியா சென்ற இலங்கை அகதிகள் கண்ணீர்

கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து படகு மூலம் தமிழ்நாட்டுக்கு இதுவரை 75 இலங்கைத் தமிழர்கள் சென்றுள்ளனர். ஆனால், தாய்நாட்டை விட்டு வெளியேறி வந்த அவர்கள், அகதிகளாக பதிவு செய்யப்படாமல் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். வழக்கமாக இதுபோல் உரிய ஆவணமின்றி வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குள் வந்தால் அவர்கள் மீது கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், இலங்கையில் நிலவிவரும் அசாதாரண சூழல் காரணமாக தமிழ்நாட்டுக்குச் சென்றவர்களை மனிதாபிமான அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் அகதிகள் முகாமில் கண்காணிப்பில் தங்க வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு, உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக அகதிகளாக தமிழகத்துக்கு கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதிமுதல் இதுவரை 75 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழகம் சென்றுள்ள இலங்கைத் தமிழர்களை தற்போதுவரை அகதிகளாக பதியாமல் உணவு, தங்குமிடம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து அகதிகளாக சென்றுள்ள இலங்கைத் தமிழர்களை அகதிகளாக பதிய வேண்டும் என இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து கோரிக்கைவிடுத்து வருகின்றனர். இந்திய அரச முகாம்களில் தங்கியுள்ள அவர்கள் அகதிகளாக பதியவில்லையென்றால் அவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்பக்கூடிய சூழ்நிலை ஏற்படும் எனத் தெரிய வருகிறது.

**இலங்கைத் தமிழர்களை சந்தித்த தமிழக முதல்வர்**

இலங்கைத் தமிழர்களிடம் கடந்த 15ஆம் திகதி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் பேசினார்.

4 மாத கைக்குழந்தையுடன் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தமிழகம் வர என்ன காரணம் என முதலமைச்சர் கேட்டார். அதற்கு பதிலளித்த மேரி கிளாரா என்ற பெண், இலங்கையில் தற்போதுள்ள



விலைவாசி உயர்வுக்கு எனது குழந்தையை வைத்துக்கொண்டு இலங்கையில் வாழ முடியாது, குழந்தைக்கு கொடுக்கும் பால்மா ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுகிறது. என்னால் அவ்வளவு பணம் கொடுத்து பால்மா வாங்கி குழந்தைக்கு கொடுக்க முடியாதென்பதால் உயிரைப் பணயம் வைத்து தமிழகம் வந்ததாக தெரிவித்தார்.

தமிழகத்திற்கு அகதிகளாக வந்த எங்கள் மீது வழக்கு பதிவுசெய்து புழல் சிறை வரை அழைத்துச் சென்றனர். ஆனால், தமிழக அரசின் சிறப்பு உத்தரவின் பேரில் வழக்குகளை இரத்துச்செய்துவிட்டு சிறையில் அடைக்காமல் மனிதாபிமான அடிப்படையில் எங்களை முகாம்களில் தங்கவைத்துள்ளனர்.

இருப்பினும் எங்களை இதுவரை அகதிகளாக பதியவில்லை என மேரி கிளாரா முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர், தற்போதுவரை மத்திய அரசிடமிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழர்களை அகதிகளாக பதிவது குறித்து எந்தவித அதிகாரப்பூர்வ தகவலும் கிடைக்கவில்லை. இருப்பினும், இது தொடர்பாக மத்திய அரசுடன் மாநில அரசு தொடர்ந்து ஆலோசனை செய்து வருகிறோம். விரைவில் நீங்கள் அனைவரும் அகதிகளாகப் பதியப்படுவீர்கள்.

அதுவரை உங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குமாவத்திடம் இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துகொடுத்து அவர்களை மனிதாபிமான அடிப்படையில் நடத்துமாறும் அறிவுறுத்தினார்.

மேலும் இதுகுறித்து மற்றுமொருவர் தெரிவிக்கையில்,

இலங்கையில் நாங்கள் பட்ட கஷ்டத்தைக் காட்டிலும் இங்கு நிம்மதியாக இருக்கிறோம். இங்கு வந்தபிறகுதான் பிள்ளைகளை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை வந்துள்ளது. எங்களை வெளியே வேலைக்குச் செல்ல அனுமதிக்குமாறு அதிகாரிகளை கேட்கிறோம். ஆனால், எங்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை.

எங்களை வேலைக்குப் போக அனுமதித்தால்தானே எங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்க்க முடியும் தொடர்ந்து பதிவு இல்லாமல் எங்களால் எத்தனை மாதம் இப்படி இருக்க முடியும்.

இலங்கையை விட இங்கு காய்கறி, அத்தியாவசியப் பொருட்களின் விலை மிகவும் குறைவாக இருக்கின்றன. முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை மக்கள் குறைந்த விலைக்கு பொருட்கள் வாங்கி சாப்பிடுவதை பார்க்கும்போது நாங்களும் வெளியே சென்று எங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி சமைத்து சாப்பிட வேண்டும் என ஆசையாக இருக்கிறது.

நாங்கள் வந்த நாள்முதல் இதுவரை வீட்டில் சமைக்கவில்லை, எங்களுக்கு மூன்று நேரமும் உணவு வழங்கப்படுகிறது. அந்த உணவை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம்.

நான் இலங்கையிலிருந்து வரும்போது பத்தாயிரம் ரூபா இலங்கைப் பணம் எடுத்து வந்திருந்தேன். அந்த பணத்தை இங்கு மாற்றி இரண்டு ஆயிரம் ரூபா வைத்துள்ளேன். என்னிடம் உள்ள பணம் முடியப்போகிறது. பணம் முடிந்தபின் என்ன செய்வது என்று தெரியவில்லை.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழக முதலமைச்சர் எங்களுடன் காணொளி காட்சி மூலமாக பேசியபோது, உங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்யும் அதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஆனால், எங்களை அகதியாக பதிவது குறித்து எந்தவிதமான உறுதியான தகவலும் தெரிவிக்கவில்லை.

தற்போது அகதிகள் முகாமில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் மழை பெய்தால் ஒழுகும் நிலையிலுள்ளது. இது குறித்து நாங்கள் அதிகாரியிடம் தெரிவிக்கையில், விரைவில் சரிசெய்து தருவதாக தெரிவித்துள்ளனர். ஆனால், தொடர்ந்து பெய்த மழையால் வீடுகளுக்குள் தண்ணீர் வந்துவிட்டது.

எங்களுக்கு பாய், மின்விசிறி, தண்ணீர் குடம், உள்ளிட்ட பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது மட்டும் எங்களுக்கு எப்படி போதுமானதாக இருக்கும். எங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த நாங்கள் வெளியே சென்று வேலை செய்தால் மட்டுமே தொடர்ந்து இங்கு வாழ முடியும். எனவே, எங்களை உடனடியாக அகதிகளாக பதிவுசெய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி செய்தால்தான் நாங்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்ததற்கு அர்த்தமாக இருக்கும் என தெரிவித்தார்.

இது குறித்து இலங்கையிலிருந்து வந்த மற்றொரு பெண் தெரிவிக்கையில்,

நான் தமிழகம் வந்து 25 நாட்களுக்கு மேலாகிறது. ஆனால், தற்போதுவரை எங்களை அகதியாக பதியவில்லை. இது எங்களுக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது. பல பிரச்சினைகளுக்கு மத்தியில் இனி எங்கள் எதிர்காலம் தமிழகத்தில்தானென தஞ்சம் புகுந்த எங்களை அகதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் நாங்கள் வேறு எங்கு செல்வது.

எங்களைபோல் பலரும் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வர தயாராகவுள்ள நிலையில், இப்படி வந்தவர்களை அகதிகளாக பதியாமல் வைத்திருந்தால் எப்படி அவர்கள் தமிழகம் வர நினைப்பார்கள்.

அகதிகள் முகாமிலுள்ள அலுவலகத்தில் கேட்கும்போது மத்திய அரசு சார்பில் தற்போதுவரை உங்களை அகதிகளாக பதிவுசெய்ய எந்தவிதமான அதிகாரப்பூர்வ உத்தரவு வரவில்லை. எனவே, மனிதாபிமான அடிப்படையில்தான் உங்களை தற்போது இங்கு தங்கவைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதே நிலை நீடித்தால் எங்கள் எதிர்காலம் கேள்விக்குறியாகும். எங்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்ப வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக சொல்லப்படுகிறது. அப்படி அனுப்பும் பட்சத்தில் நான் எனது நகைகளை விற்று தமிழகம் வந்ததற்கான அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

எனவே, தமிழக அரசு இந்திய அரசிடம் பேசி எங்களை அகதிகளாக பதிவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

**இலங்கைக்கு திரும்பிச் செல்ல விருப்பம் இல்லை**

இது குறித்து பிபிசி தமிழிடம் பேசிய மற்றொரு இலங்கைத் தமிழர், நாங்கள் கடந்த 15 நாட்களுக்கு முன்பு இலங்கையிலிருந்து அகதிகளாக தனுஷ்கோடி வந்தடைந்தோம். பின்னர் அங்கிருந்து பொலிஸார் அழைத்துவந்து விசாரணை மேற்கொண்டு தற்போது மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

நாங்கள் கொண்டுவந்த பணம் முடிந்துவிட்டது. எங்களை வெளியே அனுப்பினால்தான் வேலைக்கு சென்று சம்பாதிக்க முடியும் ஆனால், எங்களை வெளியே செல்ல அனுமதிக்காமல் உள்ளேயே தங்க வைத்துள்ளனர்.

நான் கடந்த 1990ஆம் ஆண்டு போரின் காரணமாக



இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்தபோது மறுநாளே அகதியாக பதிவுசெய்து அரசால் மாதம் 10 ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.

ஆனால், இன்றுவரை எங்களை அகதிகளாக பதிவு செய்யாமல் முகாமில் அடைத்துவைத்துள்ளனர். என்ன நடக்கிறது என்று ஒன்றும் புரியாமல் குழப்பமான மனநிலையில்தான் இங்கு தங்கியிருக்கிறோம். எங்களுக்கு மட்டுமல்ல, எனக்கு முன்னால் வந்தவர்களும் இன்னும் அகதிகளாக பதியாமல் காத்திருக்கிறார்கள்.

நாங்களும் ஒவ்வொரு முறையும் அகதிகள் மறுவாழ்வு அதிகாரிகளிடம் கேட்கும்போது மேலிடத்திலிருந்து எங்களுக்கு உத்தரவு வரும்வரை உங்களை அகதிகளாக பதிவுசெய்ய முடியாது. அதுவரை கொடுக்கும் உணவை சாப்பிட்டுவிட்டு தங்குமாறு சொல்கிறார்கள்.

எங்களை வேலைக்கு செல்ல அனுமதித்தால்தான் எங்கள் பிள்ளைகள் ஆசைப்பட்டதை வாங்கி கொடுக்கலாம் - என்றார்.

**மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்ப திட்டமா?**

இது குறித்து ஓப்பர் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவிக்கையில்,

முன்பெல்லாம் அகதிகளாக வரும் இலங்கைத் தமிழர்களை உடனடியாக அகதிகளாக பதிவுசெய்து மண்டபம் அகதிகள் முகாம் அல்லது தமிழகத்திலுள்ள ஏதாவது ஓர் அகதிகள் முகாமுக்கு மாற்றப்பட்டு அங்கு அவர்களுக்கு வீடு வழங்கப்படும்.

உயிர் பயம் காரணமாக இனி இந்த நாட்டில் உயிர் வாழ முடியாது என்று ஒரு நாட்டை விட்டு வருபவர்கள் மட்டும் அகதிகளாக பதிவுசெய்ய முடியும். ஆனால், தற்போது இலங்கையிலிருந்து வருபவர்கள் பசி, பட்டினி என்று வருவதால் அவர்களை அகதிகளாக பதிவுசெய்யாமல் வழக்கு பதிவுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைப்பதுதான் வழக்கம். தமிழக அரசின் சிறப்பு உத்தரவின்பேரில் சமீபத்தில் இலங்கையிலிருந்து வந்துள்ள 75 பேரும் அகதிகளாக பதியாமல் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

இவர்களுக்கு பதிவு கொடுக்க வாய்ப்பில்லை என எங்களுக்கு தெரியவருகிறது. அகதிகளாக பதிவுசெய்தால் மட்டுமே இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பாமல் அவர்களுக்கு ஆதார் அட்டை உள்ளிட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு முகாமில் தங்கவைக்கப்படும். ஆனால், தற்போது வந்தவர்களுக்கு உணவு கொடுத்து விருந்தினர்களாக மட்டுமே தங்கவைத்துள்ளனர்.

இந்த 75 பேரையும் வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அவர்களைப் பொறுத்தளவில் இது சிறையில் இருப்பதுபோல்தான். ஆனால், முகாம்களுக்குள் சுதந்திரமாக சுற்றித் திரியலாம்.

இதுநாள்வரை தமிழகத்திற்கு அகதிகளாக வந்து ஒரு மாதத்திற்குமேல் அகதிகளாக பதியாமல் யாரையும் தங்க வைத்ததில்லை. இதுவே முதல் முறை எங்களை பொறுத்தவரை இதே நிலை நீடித்தால் அவர்களை மீண்டும் நாட்டிற்கு திருப்பியனுப்பக்கூடிய நிலைதான் ஏற்படும்.

ஒருவேளை தற்போது வந்துள்ள இலங்கைத் தமிழர்கள் விரும்பினால் பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்து வெளியில் தங்கலாம். ஆனால், அவர்கள் அகதிகளாக பதிவு பெறாமல் எத்தனை நாட்கள் தமிழகத்தில் தங்கியிருந்தாலும் எந்த பயனும் இல்லை -என்றார்.





# இன்று 68ஆவது நாளாகவும் தொடரும் உக்ரைன் - ரஷ்ய மோதல்

## ஒரு பக்கம் பேச்சுவார்த்தை; மற்றொரு பக்கம் குண்டுமழை; பற்றி எரியும் உக்ரைன்: ஒரே இரவில் 389 இராணுவத்தளங்கள் மீது தாக்குதல்

போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா ஒரு பக்கம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே, மறுபக்கம் தாக்குதல் நடத்தி வருவதால், உக்ரைனின் பல பகுதிகளில் குடியிருப்புகள், இராணுவத்தளங்கள் பற்றி எரிகின்றன.

நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா போர் தொடுத்தது. இந்தப் போர் இன்று 68ஆவது நாளாகவும் தொடர்கிறது. போர் நிறுத்தம் தொடர்பாக அவ்வப்போது இருநாட்டு பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தினர். பல்வேறு நாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள், ஐ.நா. பொதுச்செயலாளர் ஆகியோர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் பேசி போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்தனர்.

அப்போது, மக்களை மனிதநேய பாதையில் பாதுகாப்பாக வெளியேற்றுவது, படைகளை திரும்பப் பெறுவது போன்ற வாக்குறுதிகளை ரஷ்யா கொடுத்தது. ஆனால், ரஷ்யா தான் அளித்த வாக்குறுதியை காப்பாற்றாமல், உக்ரைன் தலைநகர் கீவ், மரியுபோல் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மற்றும் கிழக்கு, தெற்கு உக்ரைனில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்யாவின் அத்துமீறல் காரணமாக மேற்கு நாடுகளின் ஆயுத உதவிகள் மூலம் ரஷ்யாவுக்குள் புகுந்து உக்ரைன் அதிரடி தாக்குதல் நடத்தியது.

**ரஷ்யாவுக்குள் ஊடுறுவி உக்ரைன் தாக்குதல்**

கடந்த சில வாரங்களுக்கு முன் எல்லையிலிருந்து சுமார் 10 கி.மீ தூரம் ரஷ்யாவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய உக்ரைன், கடந்த சில நாட்களுக்கு முன் சுமார் 300 கி.மீ தூரம் ரஷ்யாவுக்குள் புகுந்து 3 மாகாணங்கள் மீது ட்ரோன் மூலம் குண்டுவீசி தாக்குதல் நடத்தியது. இதனால், ஆத்திரமடைந்த ரஷ்யா, வெள்ளிக்கிழமை ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோனியா குட்டரெஸ் உக்ரைனில் தலைநகர் கீவ்வில் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியை சந்தித்து பேசி கொண்டிருக்கும்போது கூட, கீவ் நகர குடியிருப்புகள் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் பல குடியிருப்புகள் தீப்பற்றி எரிந்தன.

**389 இராணுவத்தளங்கள் மீது தாக்குதல்**

இந்த பகுதிகளில் இன்னும் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. கார்கிவ்வில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 20வீத குடியிருப்பு கட்டடங்கள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளன. இந்நிலையில், உக்ரைனின் பல்வேறு பகுதிகளில் உள்ள 389 இராணுவத் தளங்கள் மீது ரஷ்யா வெள்ளிக்கிழமை இரவு அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது. கடந்த வாரம் ஒரே இரவில் 423 இடங்களை அது தாக்கியது. தற்போது, தெற்கு, கிழக்கு உக்ரைன் மற்றும் மரியுபோலை கைப்பற்ற ரஷ்யா தீவிரத்தாக்குதல் நடத்தி வருகிறது.

இங்குள்ள சில நகரங்களில் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால், பல குடியிருப்புகள், இராணுவத்தளங்கள் தீப்பற்றி எரிகின்றன. போருக்கான சைரன்கள் ஒலித்து கொண்டேயிருக்கின்றன. குறிப்பாக, மரியுபோல் தொழிற்சாலையில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றும் முயற்சி தொடர்ந்து தோல்வியை தழுவி வருகிறது. தங்களை காப்பாற்றும்படி மக்கள் கெஞ்சி வருகின்றனர். ஆனால், ரஷ்யப்படைகள் அவர்கள் வெளியேறுவதை தடுக்கும் வகையில்



தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டே இருக்கிறது.

**உருக்குலைந்த மரியுபோல்**

ரஷ்யப் படைகளின் தொடர் தாக்குதலால், உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோல் உருக்குலைந்திருப்பதை காட்டும் செயற்கைக் கோள் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

மாக்ஸார் டெக்னாலஜிஸ் என்னும் அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் சேகரித்த இந்த செயற்கைக்கோள் புகைப்படங்கள், பல்பொருள் அங்காடிகளில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதையும் சேதமடைந்த கட்டிடங்களுக்கு இடையே மக்கள் திரண்டிருப்பதையும் காட்டுகின்றன.

மரியுபோல் நகர் மீது தொடர் தாக்குதலை



நடத்திய ரஷ்யா, கடந்த வாரம் அந்நகரை கைப்பற்றிவிட்டதாக அறிவித்தது. அங்குள்ள அசோவ்ஸ்டல் இரும்பு தொழிற்சாலையையும் ரஷ்யப் படைகள் தாக்கிய நிலையில், அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

அவர்களை மீட்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்திருக்கிறார்.

**'சூசைட் ட்ரோன்'களை வழங்குகிறது அமெரிக்கா**

ரஷ்யாவை கட்டுப்படுத்த உக்ரைனுக்கு 'சூசைட் ட்ரோன்' என்ற அழைக்கப்படும் நூற்றுக்கணக்கான பீனிக்ஸ் கோஸ்ட் ட்ரோன்களை அமெரிக்கா வழங்குகிறது.

கிழக்கு உக்ரைனில் ஆதிக்கம் செலுத்தும் ரஷ்யாவிற்கு பதிலடி கொடுக்க அமெரிக்கா வழங்கும் ட்ரோன்களை அப்பகுதியில் உக்ரைன் நிறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவை சேர்ந்த இவேக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள பீனிக்ஸ் கோஸ்ட் ட்ரோன் பெயருக்கு ஏற்றார்போல் இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் சக்தி கொண்டது என தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைனுக்கு 121 ட்ரோன்களை அமெரிக்கா வழங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒவ்வொரு ।திட்புக்கு ஏற்ப ட்ரோன் தாக்கி அழிக்கும் தளவா। த்தின் தன்மை மாறுபடும் என்றும் உக்ரைன் வீரர்கள் எளிதில் தூக்கிச்சென்று எந்த இடத்தில் இருந்தும் பயன்படுத்தக்கூடிய வகையில் ட்ரோன் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டான்பாஸ், மக்களை அழிக்க ரஷ்யா முயற்சி**

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில், 'தொடர்ச்சியான மிருகத்தனமான குண்டுவீச்சுகள், உட்கட்டமைப்பு மற்றும் குடியிருப்புப் பகுதிகள் மீதான தாக்குதலால், டான்பாஸ் மற்றும் அங்கு வசிக்கும் அனைவரையும் அழிக்க ரஷ்யா முயற்சிக்கிறது. இது, வாழ்க்கைக்கான போராட்டம். உக்ரைன் நிலைத்து நின்றால்தான் டான்பாஸ் நகரங்களும் நிலைத்திருக்கும்'' என தெரிவித்தார்.

**உக்ரைனின் புகழ்பெற்ற விமானி போரில் வீரமரணம்**

ரஷ்யாவின் நாற்பது விமானங்களைச் சுட்டு வீழ்த்திய உக்ரைனின் சிறந்த விமானியான ஸ்டீபன் தாராபல்கா போரில் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

29 வயதேயான விமானி தாராபல்கா ரஷ்யத் தாக்குதலைத் தொடங்கியதில் இருந்தே அந்நாட்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்திப் புகழ்பெற்றார். ஐந்துக்கு மேற்பட்ட விமானங்களை சுட்டுவீழ்த்தியதற்காகச் சிறந்த விமானி என்கிற பட்டத்தையும், 'கீவ்வின்





பேய்' என்கிற பட்டப்பெயரையும் பெற்றார்.

மார்ச் 13ஆம் திகதி அவர் போரில் உயிரிழக்கும் வரை ரஷ்யாவின் 40 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக 'த டைம்ஸ் நாளிதழ்' தெரிவித்துள்ளது. இந்த வீரதீர செயலுக்காக 'ஆர்டர் ஒப் த கோல்டன் ஸ்டார்', 'உக்ரைனின் நாயகன்' ஆகிய விருதுகள் இறப்புக்குப் பின் அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. இது குறித்து உக்ரைனிய அரசோ, அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகமோ கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

**முதல் நாளிலேயே ஸெலென்ஸ்கியை கொல்ல முயற்சி**

உக்ரைன் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி ஆண்ட்ரி யெர்மக் அமெரிக்க நாளிதழுக்கு வழங்கியுள்ள நேர்காணலில், 'பெப்ரவரி 24ஆம் திகதி அதிகாலை உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்த நேரத்தில், ஜனாதிபதி ஸெலெனஸ்கியையும், அவரது குடும்பத்தினரையும் கொல்ல அல்லது உயிருடன் பிடிப்பதற்காக ரஷ்யப் படைகளின் சிறப்புக் குழுக்கள் தலைநகர் கீவ்வுக்குள் பெராசூட் மூலம் நுழைந்தனர்.

அன்று இரவு நடந்த காட்சிகள், நாங்கள் திரைப்படத்தில் மட்டுமே பார்த்துள்ளோம். அப்போது, ஸெலென்ஸ்கி, அவரது மனைவி ஓலேனா ஜெலென்ஸ்கா, அவருடைய 17 வயது மகள் மற்றும் 9 வயது மகனை ரஷ்யப் படைகள் சுற்றிவளைத்தன. அவர்களிடம் இருந்து போராடி முதலில் ஸெலென்ஸ்கியை மீட்டோம். பின்னர், அவரது குடும்பத்தினரை மீட்டோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

---

# உலக செய்திகள்

## லிவிவ் நகருக்குச் சென்ற நடிகை ஏஞ்சலினா ஜோலி



பிரபல அமெரிக்க நடிகையும், ஐ.நா. அகதிகளுக்கான முகாமையின் தூதருமான ஏஞ்சலினா ஜோலி திடீர் பயணமாக உக்ரைன் சென்றார்.

லிவிவ் நகர வீதிகளில் ரஷ்யப் படையெடுப்பால் ஏற்பட்டுள்ள சேதங்களை பார்வையிட்ட ஏஞ்சலினா போரால் வாழ்வாதாரத்தை தொலைத்த மக்கள் மற்றும் குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

குண்டு தாக்குதல்களில் காயமடைந்த குழந்தைகளை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்த ஏஞ்சலினா ஜோலி, அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

லிவிவ் நகரிலுள்ள ஒரு சிற்றூண்டி கடையில் தன்னார்வலர்களுடன் ஏஞ்சலினா கலந்துரையாடியது, குழந்தைகளுக்கு ஒட்டோகிராப் வழங்கியது உள்ளிட்ட வீடியோக்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

## சிலியில் தென்பட்டது முதல் சூரிய கிரகணம்



சிலியில் இந்த ஆண்டின் முதல் சூரிய கிரகணம் தென்பட்டது.

நள்ளிரவு 12:15 மணிக்கு ஆரம்பித்த சூரிய கிரகணம் அதிகாலை, 4:08 மணி வரை நீடித்தது.

அண்டார்டிகா, அட்லாண்டிக் பகுதி, பசுபிக் பெருங்கடல், தென் அமெரிக்காவின் தென்மேற்கு பகுதிகளில் இந்த சூரிய கிரகணம் தென்பட்டது.

இந்த ஆண்டிற்கான இரண்டாவது சூரிய கிரகணம் எதிர்வரும் ஒக்டோபர் 25ஆம் திகதி நிகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் - எரிவாயு இறக்குமதியில் ஐரோப்பிய நாடுகளுக்கு சிக்கல்



எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு ரஷ்யாவை நம்பியுள்ள ஐரோப்பிய நாடுகள், ரூபிள் பணப் பரிமாற்றத்தால் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றன.

ரூபிளை கொண்டு எரிவாயு வாங்க ஒத்துக்கொள்ளாததால் போலந்து மற்றும் பல்கேரியாவுக்கு எரிவாயு விநியோகத்தை நிறுத்திய ரஷ்யாவின் நடவடிக்கையை அச்சுறுத்தலாக கருதுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

2019இல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மொத்த எரிவாயு இறக்குமதியில் 41 சதவீதத்தை கொண்டிருந்த ரஷ்யா, விநியோகத்தை நிறுத்தினால் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட இறக்குமதி மூலம் எரிவாயுவை பூர்த்தி செய்யும் நாடுகளை பெரியளவில் பாதிக்கும் என்றும், குளிர்காலத்தில் எரிவாயு தேவை அதிகரிக்கும் நிலையில், ஐரோப்பிய நாடுகளின் நிலைமை மோசமடையும் எனவும் கருதப்படுகிறது.

அமெரிக்கா, சவூதியை அடுத்து 3ஆவது பெரும் எண்ணெய் உற்பத்தியாளராக உள்ள ரஷ்யா நாளொன்றுக்கு ஏற்றுமதி செய்யும் 50 இலட்சம் பீப்பாய்கள் மசகு எண்ணெயில் பெரும் தொகையை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வந்தது.

ரஷ்யாவுக்கு மாற்றாக அஜர்பைஜான், துருக்கி, கிரீஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து எரிவாயு இறக்குமதி செய்யும் திட்டத்தில் பல்கேரியா இறங்கியுள்ளது. கட்டார், அல்ஜீரியா, நைஜீரியா உள்ளிட்ட மற்ற நாடுகளில் எரிவாயு இறக்குமதி செய்வதில் நடைமுறை சிக்கல் நிலவுவதால் ஐரோப்பிய நாடுகளுக்கு பின்னடைவாகவே கருதப்படுகிறது.

## 5 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது சீனா



கிழக்கு சீனக்கடலிலிருந்து 5 செயற்கைக்கோள்களை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

Jilin-1 Gaofen 03D உள்ளிட்ட செயற்கைக்கோள்கள் லோங் மார்ச் - 11 ரொக்கெட் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அவை திட்டமிடப்பட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நுழைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள்கள் நில வள ஆய்வு, நகர்ப்புற திட்டமிடல் மற்றும் பேரிடர் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெடிகுண்டுடன் விமான நிலையத்துக்கு வந்த தம்பதியர்: பீதியில் அலறியடித்து ஓடிய பயணிகள்; இஸ்ரேலில் சம்பவம்



இஸ்ரேலில் வெடிகுண்டுடன் விமான நிலையத்திற்கு வந்த அமெரிக்க தம்பதியை கண்டு சக பயணிகள் அலறியடித்துக் கொண்டு ஓடியுள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கோலன் பகுதிக்கு சுற்றுலா சென்ற அமெரிக்காவை சேர்ந்த தம்பதியினர், கீழே கிடந்த ஒரு பொருளை எடுத்து, தங்கள் நாட்டுக்கு கொண்டு செல்ல முயன்றுள்ளனர். விமான நிலையத்திற்கு அப்பொருளை குறித்த தம்பதியர் கொண்டு சென்ற நிலையில், பாதுகாப்பு சோதனையில் அது வெடிக்காத குண்டு என கண்டுபிடிக்கப்பட்டது.

இதைக் கண்ட சக பயணிகள் விமான நிலையத்திற்குள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். தப்பிக்கும் முயற்சியில் கீழே விழுந்து காயமடைந்த பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதையடுத்து பல்வேறு கட்ட விசாரணைக்கு பின் தம்பதியர் வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# முன்னாள் டென்னிஸ் வீரருக்கு இரண்டரை ஆண்டுகால சிறை

ஜேர்மனைச் சேர்ந்த 54 வயதாகும் முன்னாள் டென்னிஸ் வீரர் போரிஸ் பெக்கர் லண்டனில் வசித்து வருகிறார். கடந்த 2002ஆம் ஆண்டு வரி ஏய்ப்பு புகாரில் அவர் சிக்கினார். அப்போது இவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, நிறுத்திவைக்கப்பட்டது.

தனியார் வங்கியில் கோடிக்கணக்கில் பணம் கடனாக வாங்கிய அவர், அதை திருப்பிச் செலுத்தாமல் தன்னை 2017இல் திவாலானவராக அறிவித்தார். சொத்துகளை மறைத்து ஏமாற்றியதாக 20 பிரிவுகளில் அவர் மீது வழக்குப் பதியப்பட்டது. இது தொடர்பான வழக்கு இங்கிலாந்தின் சவுத் வோர்க் கிரவுன் கோர்ட்டில் நடந்தது.

இந்நிலையில், நேற்று முன் தினம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட பெக் கருக்கு இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக் கப்பட்டது.



# லா–லிகா சம்பியனான ரியல் மெட்ரிட்

உதைபந்து உலகின் பிரபல லீக் தொடர்களில் ஒன்றான லா-லிகா தொடரின் 35ஆவது சம்பியன் பட்டத்தை ரியல் மெட்ரிட் கழகம் வென்றது. 4-0 என்ற கோல்கள் கணக்கில் எஸ்பான்யோலை வீழ்த்தி ரியல் மெட்ரிட் பட்டத்தை வென்றது.

சம்பியன் பட்டத்தை வெல்வதற்கு ஒரு புள்ளி மட்டுமே தேவைப்பட்ட நிலையில், சாண்டியாகோ பெர்னாபியூவில் நடந்த முதல் பாதியில் மார்கோ அசென்சியோ மற்றும் கரீம் பென்ஸெமா ஆகியோரின் கோல்களுக்கு முன்பாக மெட்ரிட் பிரேசிலின் மூலம் இரண்டு முறை கோல் அடித்தது. இரண்டாவது இடத்திலுள்ள செவில்லாவை விட மெட்ரிட் நான்கு போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் 17 புள்ளிகள் முன்னேறியது. பார்சிலோனா ஒரு ஆட்டத்தை கையில் வைத்திருந்தாலும் 18 புள்ளிகள் பின்தங்கிய நிலையில் உள்ளது. எஸ்பான்யோலின் ஆட்டத்திற்கு முன்பே மாட்ரிட் பயிற்சியாளர் கார்லோ அன்செலோட்டி ஆரம்பத்திலிருந்தே பென்சிமா மற்றும் வினிசியஸ் ஜூனியர் ஆகியோருக்கு ஓய்வு அளித்தார். இந்த வெற்றி மூலம் 2021-22ஆம் ஆண்டுக்கான லா-லிகா சம்பியன் பட்டத்தை ரியல் மெட்ரிட் தனதாக்கியது.

# கன்னி 5 விக்கெட்டுகளை சுருட்டிய லக்மால்



சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளரான சுரங்க லக்மால் கவுண்டி கிரிக்கெட்டில் டெர்பிஷயார் அணிக்காக தனது முதல் 5 விக் கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

இந்திய அணிக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற சுரங்க லக்மால், கவுண்டி போட்டித் தொடரில் டெர்பிஷயார் அணிக்காக விளையாடி வருகின்றார்.

இந்நிலையில், இங்கிலாந்தில் தற்போது நடைபெற்று வருகின்ற கௌண்டி சம்பியன்ஷிப் டிவிஷன்-2 போட்டித் தொடரில் டெர்பிஷயார் மற்றும் க்ளெமோர்கன் அணிகளுக்கு இடையிலான போட்டி கடந்த 28ஆம் திகதி ஆரம்பமாகியது.

இந்தப் போட்டியில் டெர்பிஷயார் அணிக்காக அபாரமாக பந்துவீசிய சுரங்க லக்மால், 82 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த் தினார். இதன்மூலம் கவுண்டி போட்டிகளில் தனது முதலாவது 5 விக்கெட்டுகள் குவியலைப் பதிவுசெய்தார்.

அதுமாத்திரமின்றி, க்ளெமோர்கன் அணிக்காக சதமடித்து 130 ஓட்டங்களைக் குவித்த உலகின் நம்பர்-1 டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான அவுஸ்திரேலியாவின் மார்னஸ் லபுஷேன், சுரங்க லக்மாலின் முதல் விக்கெட்டாக அமைந்தது. டெர்பிஷயார் அணிக் காக இதுவரை 4 போட் டிகளில் விளையாடி யுள்ள சுரங்க லக்மால் 11 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

# சி.எஸ்.கேவின் திடீர் கெப்டன்ஷி மாற்றத்திற்கு என்ன காரணம் தெரியுமா ?

ஐ.பி.எல். நடப்பு சம்பியன் மட்டுமல்லாமல் 4 முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஆரம்பத்திலிருந்து புதிய கெப்டன் ரவீந்திர ஜடேஜா தலைமையில் தடுமாறி வருகிறது.

பேட்டிங், பந்துவீச்சு, பீல்டிங் ஆகிய வற்றில் சிறப்பாக செயற்படக்கூடிய ஜடேஜா, கெப்டன் பதவி கிடைத்த பிறகு அழுத்தங்கள் காரணமாக சிறப்பாக செயற்படவில்லை. இப்படி அழுத்தங்களுடன் இருக்கும் இவர், அடுத்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டிக்காக பயிற்சிசெய்து வந்தார். அப்போது இவரால் சிறப்பாக பேட்டிங் செய்ய முடியவில்லை. தடுமாறியதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற அணி கூட்டத்தில் முன்னாள் கெப்டன் தோனி தற்போதைய கெப்டன் ஜடேஜாவை பேச அழைத்தார்.

அப்போது பேசிய ஜடேஜா, ''பயிற்சியின்போது என்னால் சிறப்பாக பேட்டிங் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் கெப்டன்ஷி அழுத்தம்தான் என நினைக்கிறேன். இன்னமும் 6 போட்டிகள்தான் எஞ்சியிருக்கின்றன. இந்த 6 போட்டி களிலும் கெப்டனாக இருந்தால், எனக்கு அழுத்தங்கள் மேலும் அதிகரிக்கும். இதனால், கெப்டன் பதவியிலிருந்து விலகுவதை தவிர, எனக்கு வழியில்லை. இந்த முடிவை நிர்வாகம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்'' என யாரும் எதிர்பாராத வகையில் பேசிவிட்டு அமர்ந்திருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பேசிய தோனி, ''ஜடேஜாவின் முடிவை அனைவரும் மதித்துத்தான் ஆகவேண்டும். இந்திய அணிக்கு அவர் தேவை. ஐ.பி.எல். காரணமாக அவரது எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. அடுத்த 6 போட்டிகளுக்கும் நானே தலைமை தாங்குகிறேன்'' எனக் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனைத் தொடர்ந்துதான் அணி நிர்வாகம் மீண்டும் தோனி கெப்டன் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பை உடனே வெளியிட்டது.



# மறைந்த வோர்னுக்கு புகழஞ்சலி செலுத்திய ராஜஸ்தான் ரோயல்ஸ்










ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் முன்னாள் கெப்டனும், அந்த அணிக்கு முதல் முறை சம்பியன் பட்டத்தை வென்றுகொடுத்தவருமான மறைந்த அவுஸ்திரேலிய ஜாம்பவான் ஷேன் வோர்னுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியினர் வித்தியாசமான ஜெர்ஸியில் களமிறங்கினர்.

கடந்த 2008ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஆரம்பத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு கெப்டனாக ஷேன் வோர்ன் நியமிக்கப்பட்டு, முதல் முறையிலேயே சம்பியன் பட்டத்தையும் பெற்றுக்கொடுத்தார். லெக்ஸ்பின்னில் ஜாம்பவானான ஷேன் வார்ன் கடந்த மார்ச் 4ஆம் திகதி தாய்லாந்தில் சுற்றுலா ஓய்வு நாட்களை கழிக்கச் சென்றபோது தனது 52ஆவது வயதில் உயிரிழந்தார்.

ஷேன் வோர்னின் புகழாஞ்சலி செலுத்தும் வகையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியினர் SW23 என்ற எண் அச்சிடப்பட்ட ஜெர்ஸியை அணிந்து களமிறங்கினர். ஷேன் வோர்னுக்கும் 23ஆம் எண்ணுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வோர்னின் குழந்தைப் பருவத்தில் உதைபந்துவீரர் டெர்மோட் பெரிட்டன் அணிந்த ஆடையின் எண் என்பதால் விரும்பி அணிந்தார். மேலும் போட்டி நடைபெற்ற மைதானத்தின் ஒரு பகுதியில் வோர்னின் நினைவுகளை கூறும் அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது.

# சுப்மல் கில்லுக்கு அடித்த 'லக்'



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற 43ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. இப்போட்டியில் சுப்மான் கில் அவுட் என அறிவிக்கப்பட்ட பந்தில் விக்கெட் கீப்பர் ஸ்டம்புகளுக்கு முன்னால் கையுறைகளை வைத்திருந்ததால் நோ போல் வழங்கப்படுவதாக நடுவர் அறிவித்தார்.

171 ஓட்டங்கள் இலக்கை நோக்கி விளையாடிய குஜராத் அணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக சஹாவும், சுப்மான் கில்லும் களமிறங்கினர். ஷபாஷ் அஹமட் வீசிய 8ஆவது ஓவரில் பவுண்டரி விளாசிய கில், அடுத்து அவுட்டாகும் வாய்ப்பிலிருந்து தப்பினார். கில்லுக்கு ஷபாஷ் வீசிய பந்து 'வைடு' போல் போலச் சென்று விக்கெட் கீப்பர் ராவத்திடம் தஞ்சம் புகுந்தது. பேட்டில் பட்டது உறுதியாக தெரியாததால் அரைமனதுடன் அம்பயரிடம் முறையிட்டார் ராவத்.

களத்தில் இருந்த அம்பயர் வீரேந்தர் ஷர்மா விரல்களை உயர்த்தி 'அவுட்' கொடுக்க சும்பான் கில் அதிர்ச்சியடைந்தார். மூன்றாவது அம்பயரிடம் சுப்மான் கில் முறையிட அவர்கள் அல்ட்ரா எட்ஜ் முறையில் ஆய்வு செய்ததில் பந்து பேட்டில் படவில்லை என்பது உறுதியானது. சுப்மான் கில் அவுட் இல்லை என்ற அறிவிப்புடன் ஒரு போனஸ் அறிவிப்பும் வந்தது. அந்த பந்தை நோ போலாக அறிவித்தார் மூன்றாவது நடுவர். விக்கெட் கீப்பர் ஸ்டம்புகளுக்கு முன்னால் கையுறைகளை வைத்திருந்ததால் நோ போல் வழங்கப்படுவதாக அவர் அறிவித்தார்.

கிடைத்த இந்த போனஸ் வாய்ப்பை அடுத்த பந்தில் சிக்ஸராக்கினார் சுப்மான் கில். ஆனால், அவருக்கு கிடைத்த இந்த 'லக்' வெகுநேரம் நீடிக்கவில்லை. அடுத்து ஷபாஷ் வீசிய பந்தில் எல்.பி.டபுள்யூ ஆகி நடையைக் கட்டினார் கில்.






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7